யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்

வேலணை

"நாகேசுவரி" – 2013

யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்

வேலணை.

"நாகேசுவரி" 2013

அமுதவிழா

(1928 - 2008)

நூல் :- "நாகேசுவரி"

வெளியீடு :- மலர்க்குழு,
யா/சரவணை நாகேசுவரி மகா வித்தியாலயம், வேலணை.

ஆலோசனை :- அதிபர் திரு.மு.சத்தியசீலன்

இதழாசிரியர் :- திருமதி.கேமலதா கண்ணதாசன்

இணையாசிரியர்கள் :- திரு.கு.பாலஷண்முகன்
திருமதி.சிந்துஜா கௌரீதரன்
திருமதி.பிரகல்யா வினோகாந்தன்
திருமதி.றொக்ஷினி அருள்ஞானரட்ணம்

முகவரி :- யா/சரவணை நாகேசுவரி மகா வித்தியாலயம்,
சரவணை மேற்கு, வேலணை.

பிரதிகள் :- 100

பதிப்பு :- சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்,
பலாலி வீதி, கோண்டாவில்.

யா/சரவணை நாகேசுவரி மகா வித்தியாலயம்

தூரநோக்கு - VISION

தேசிய கல்வி கொள்கைகளுக்கு அமைவாகவும், பாடசாலை யின் அபிலாசைகளை நிறைவேற்றத்தக்க வகையில் சமூகப் பொருத்தப் பாடான ஆற்றல், ஆளுமை உள்ள பிரஜைகளை உருவாக்குதல்.

நோக்கக்கூற்று - MISSION

மாணவர் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர் களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை வழங்கி தேர்ச்சி பெற்ற மாணவராக்குதல்.

பாடசாலை ஆரம்பம் : 1928

காணி அன்பளிப்பு, உருவாக்கிய பெருமை :

நொத்தாரிசு திரு. கா. வினாசித்தம்பி

பாடசாலைக் கீதம்

தேவி நாகேஸ்வரி சேவடி நாண்மலர்
தூவி நாளுந் துதிப்போம் ஓம் தேவிநாகேஸ்வரி

என்னே நிற்பணிந் தேற்றப் பணி செய
ஏவா மக்கள்பன் நூற்றுவர் முன்வரும்
தன்னேர் தானாம் சரவணை ஊர்செய் தவத்தில்
விளைந்த தமிழார் அமிழ்தம் நீ

நற்றாய் விநாசித்தம்பி வெண் ணீற்றொளி
நாட்டிற் பரப்புவித் யாசங்கம் நற்பிதா
பெற்றாய் நின்னொளி போற்பல பிள்ளைகள்
பிராட்டி போற்பிறர் ஆர்திருப் போற்றினர்.

ஆறுமுகன் திரு நோக்குமுக் காலமும்
அம்மே நிற்குரித் தாகும் அடியினை
சிறுவர் யாம்கலைச் செல்வப் பயன் கொளச்
சிந்தியா எழா நின்றேம் கடைக்கணி

வாழி நாகேஸ்வரி வாழி வசிவளன்
வாழி சரவணை வாழியவே
வாழி தமிழ்மொழி வாழிதிருநெறி வாழி
உலகெல்லாம் வாழியவே.

மலரின் இதழ்கள்

இலக்குநோக்கு	iii
கல்லூரிக் கீதம்	iv
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி பிரதமகுருவின் ஆசியுரை	01
வேலணை பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் - ஆலய பிரதம குருவின் ஆசியுரை	02
அருட்பணி ஞா.பீற்றர் அவர்களின் ஆசியுரை	03
கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி	04
கோட்டக்கல்வி அதிகாரியின் வாழ்த்துச்செய்தி	05
சரவணை சேவா மன்றத் தலைவரின் (கனடா) வாழ்த்துச்செய்தி	06
முன்னாள் அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி	07
முன்னாள் அதிபர் திரு.ச.பாலேந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி	08
முன்னாள் ஆசிரியர் திரு.சி.ஜெயவரதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி	09
பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளரின் வாழ்த்துச்செய்தி	10
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி	11
அதிபரின் உள்ளத்திலிருந்து.....	12
இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....	14
பாடசாலையின் தோற்றமும், வரலாறும்	16
சரவணைக் கிராமம்	30
சூழல் மாசடைதல்	31
அம்மா	32
துணிவு இருந்தால் எதையும் வெல்லலாம்	33
எனது தாய் மொழி	34
வினா மாலை	34
சிரிக்கும் பூக்கள்	35
Mother	35
ஞாபகமும் மறதியும் வேண்டற்பாலனவே	36
இளம் மொட்டுக்களை பாதுகாப்பது.....	38
வேண்டுவது ஓர் இலட்சியம்	41
எனது எதிர்கால இலட்சியம்	43
கல்வியைத் தேடு	44
காயத்திரி மந்திரத்தின் சக்தியும் பலமும்	46
சுயஆய்வு கொள்வோம்	48

அன்புத் தம்பி ராம்	51
நாம் சென்ற கல்விச் சுற்றுலா	53
சிந்தனைக்கு சில மணிகள்	56
நனோ தொழில்நுட்பம்	57
பைபிள் பொன் மொழிகள்	61
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	62
தொப்பிப்பாடல்	63
ஞாபகத்தில் இருக்க வேண்டியது	63
நான் விரும்பும் ஆசிரியர்	64
விஞ்ஞானம் சார்ந்த உரையாடல்	64
அன்புடமை	65
The Proverbs and their Meanings	66
எவ்வளவு பழம் பறித்திருப்பான்	68
என் அம்மா	69
உயிர் ஆசான்	70
ஏழை கண்ட கனவு	71
எனது வீடு	72
பாடு பாப்பா பாடு	72
விளையாட்டுக்கள்	73
உலகில் பயன்படுத்தும் நாணயங்கள்	73
பாடுவோம் பயில்வோம்	74
எனது கணனி	74
அன்னை தெரேசா	75
வைத்தியர் பரிசோதனைக் குழாய்	76
கண்டுபிடிப்புக்கள்	77
எங்கள் வீட்டுப் பூனை	77
விலங்குகள் பற்றிய சில தகவல்கள்	78
இலங்கை பற்றிய சில தகவல்கள்	78
மாணவர் அடைவு மட்டங்கள்	79
சரவணை சேவா மன்றத்தினால் எமது பாடசாலை - நிலையான வைப்பு ஞாபகார்த்தமாக.....	80
அன்பளிப்பு செய்தோர் விபரம்	81
பரிசில் பெறும் மாணவர் விபரம்	82

ஓ

சிவமயம்

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பிரதமகுருவின்

ஆசியுரை

******

சரவணை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலின் முன்றிலில் அமைந்துள்ள நாகேஸ்வரி மகா வித்தியாலயம் தனது 85ஆம் ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழாவை நடாத்துவதுடன் அதற்கான சிறப்பு மலரையும் வெளியிட உள்ளது. அதற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நாகேஸ்வரி வித்தியாலயமும் கதிர்வேலாயுத சுவாமி ஆலயமும் சமய வழிபாட்டிலும் நாயன்மார் குருபூசை போன்ற திருவிழாக்களிலும் மாணவர் களையும் கிராம மக்களையும் ஈடுபடுத்தி சமய அறிவினையும் வழிபாட்டு முறைகளையும் வளர்ப்பதில் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இது எனது காலத்தில் காணக் கூடியதாக இருப்பதுடன் நாகேஸ்வரி வித்தியாலயம் தொடங்கிய காலம் முதல் இத் தொடர்பு இருந்தது என அறியக்கூடியதாக உள்ளது.

இத்தகைய தொடர்பு கொண்ட நாகேஸ்வரி மகா வித்தியாலயம் எடுக்க இருக்கும் பரிசளிப்பு விழாவும் வெளியிடுகின்ற சிறப்பு மலரும் சிறப்பாக அமைய ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் அருள் வேண்டிக் கொள்வதுடன் பாராட்டி வாழ்த்துக் கூறுகின்றேன்.

சிவஸ்ரீ கந்த.சிவநேச சர்மா,
ஆலயக்குரு,
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்,
சரவணை.

ஓ

சிவமயம்

வேலணை வெரியுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பிரதமகுருக்களின்

நல்லாசிச் செய்தி

******

கல்விச் செல்வத்தையும் அதனுடன் கூடிய ஒழுக்க வாழ்வையும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கி அவர்களை உயர்வடையச் செய்யும் நற்செயற்பாட்டில் அயராது உழைத்து வரும் யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய அன்னையின் அமுத விழா மலர் நூல் வெளியீட்டு நிகழ்வு பாராட்டிற்குரியதாகும்.

சரவணைக் கிராமத்தில் சைவமும் தமிழும் மேலோங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை சமயம், ஒழுக்கம், கல்வி என்பவற்றில் மென்மேலும் வளர்ச்சியடையவும் தன்னலன் கருதாது இப் பாடசாலையில் சேவை யாற்றிய, சேவையாற்றுகின்ற சகல அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் நல்லாசி கூறுவதோடு இம் மலர் சிறப்புக் கட்டுரைகளுடன் மலர நல்லாசி வழங்கி மாணவ சமுதாயத்தின் கல்வியறிவு மேலோங்கி வளர எல்லாம் வல்ல முடிப்பிள்ளையார், கதிர்வேலாயுதசுவாமி அருள் பெறப் பிரார்த்திக்கின்றேன்.

"திருவும் கல்வியும் சிருடன் தழைத்தோங்குக"

சிவஸ்ரீ மகா.பிரபாகரக் குருக்கள்
பிரதமகுரு,
வேலணை வெரியுலம் மகா கணபதிப்
பிள்ளையார் ஆலயம்.

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின்

2013ம் ஆண்டிற்கான

பரிசளிப்பு விழா

******

முதலில் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசி கூறி நிற்கின்றேன்.

சாதனை படைத்தவர்கள் கௌரவிக்கப்படும் பொழுது அவர்கள் ஊக்கப் படுத்தப்படுகின்றார்கள், பங்குபற்றி பரிசு பெறாதோர் தாங்களும் ஒரு நாள் இவ்வாறு வர வேண்டும், பரிசினைப் பெற வேண்டும் என்ற எண்ணப்பாட்டை தமது உள்ளத்தில் எடுக்கும் நாள். இந்த நாள் எல்லோருக்கும் மகிழ்வான நல்ல நாள். ஏனெனில் தமது இலட்சியங்களை தமது விழிகளிலே தாங்கி அதற்கு உயிரூட்டம் அளிக்கும் நாள். பல கனவுகளை நிஜமாக்க வேண்டும் என்று தீர்மானங்களை பதிக்கும் நாள்.

இப் பாடசாலையில் நீங்கள் ஒன்றாய், ஒரே குடும்பமாய் வாழ்ந்து ஒருவரை ஒருவர் தாங்கி நின்று உயரிய குறிக்கோளுடன் வாழ்வது ஒரு இனிமையான அனுபவம். அதிபர், ஆசிரியர்களின் தியாகத்தாலும், ஊக்குவிப்பாலும், தட்டிக் கொடுப்பதனாலும் வெற்றியின் படிகளைத் தாண்டுவது வாழ்வின் புதிய அனுபவங்களே.

பிள்ளைகளின் ஆற்றல்கள், திறன்களை இனங்கண்டு அவற்றை வளர்ப்பதை யும், அவர்களை அன்புடன் வழிநடத்துவதையும் இரு கண்களாக இப் பாடசாலை கொண்டுள்ளது. தன்னிகரற்ற சேவையினால் இப் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி அடைய இறையருள் வேண்டி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன். பலரின் எதிர்பார்ப்புக்கள் நனவாக்க ஓங்கி நிற்கும் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் பல துறைகளிலும் உயர்ந்து இத் தீவகத்தின் புகழினை மீண்டும் ஒருமுறை போற்றுதற்கு உரியதாக மாற்றும் பொறுப்பை ஏற்றவர்கள் நீங்கள். உங்கள் விடாமுயற்சியும், இறைபக்தியும், நல்லொழுக்கம் உங்கள் உயர்வினை நோக்கிச் செல்லும் என்பது உறுதி.

இப் பரிசளிப்பு விழாவில் பரிசு பெறுவோரை வாழ்த்துவதோடு பரிசு பெறாதவர்களும் நீங்களும் ஒருநாள் மேன்மை அடைய வேண்டும், உயர்வினை அடைய வேண்டும் என வாழ்த்தி நல்லாசிகளைக் கூறி நிற்கின்றேன்.

அருட்பணி ஞா.பீற்றர்
பங்குத்தந்தை

வலயக் கல்விப் பணிப்பாளரின்

வாழ்த்துச் செய்தி

******

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயமானது நாகேசுவரி என்ற மலரினை வெளியிடுவதை இட்டு வாழ்த்தும் இவ்வேளை பெறுமதியானது.

கல்வியே எமது பண்பாட்டின் உயிர்மூச்சு. கல்வியின் வழியாகவே எங்களின் அனைத்து மேன்மைகளும் கைவசமாகிறது. இவ்வகையில் எங்களின் சமூக அசைவியக்கத்தில் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயமும் கொண்ட இடம் குறிப்பிடத்தக்கது.

பெற்றோர்களும் பழைய மாணவர்களும் புலம்பெயர் கல்லூரித் தாயை மறக்காது இதன் வளர்ச்சிக்குத் துணையாக நின்ற பணி பாராட்டுக்குரியது.

நகர்ப்புறக் கல்லூரிக்கு நிகரான எங்கள் கிராமத்து வித்தியாலயங்களையும் மேம்படுத்தும் வருடாந்த திட்டங்களை வகுத்து அனைத்து மக்களினதும் அறிவியல் மேன்மையை உறுதி செய்யும் காலப்பணியில் அனைவரும் ஒன்றிணைந்திடுவோம்.

"கல்வி அழகே அழகு"

திரு.ஜோன் குயின்ரஸ்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவகக் கல்வி வலயம்.

கோட்டக் கல்வி அதிகாரியின்

வாழ்த்துச் செய்தி

******

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் பரிசுத் தினமும் **"நாகேசுவரி"** மலர் வெளியீடும் இடம்பெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1928இல் நொத்தாரிசு க.விநாசித்தம்பி அவர்களால் சைவச் சூழலில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கென ஆரம்பித்த கல்விச்சாலை எண்பது ஆண்டுகளைக் கடந்து இன்றும் தனது அயராத கல்விப் பணியைத் தொடருவது மகத்தானது. தீவகத்தில் கல்வி வளர்ச்சி என்பது பல சவால்களை உள்ளடக்கியது. நாட்டுச்சூழல், மக்கள் வாழ்க்கைமுறை, பொருளாதாரம் எனப் பல தளங்களைக் கண்டு, கடந்து பணி செய்ய வேண்டிய தேவை இங்குண்டு.

முன்னொரு காலத்தில் பலநூறு மாணவர்களைக் கொண்டு வேலணைக் கோட்டத்தில் முன்மாதிரியாகத் திகழ்ந்த பாடசாலை நாகேஸ்வரி வித்தியாலயம் என்பதை அறிந்திருக்கிறேன். முன் குறிப்பிட்டது போன்ற பல்வேறு காரணிகளால் இன்று பல இடர்பாடுகளை எதிர்கொண்டாலும் அதிபர், ஆசிரியர்களுடைய அயராத உழைப்பும் தியாகத்துடன் கூடிய பணிகளும் வாழ்த்தப்பட வேண்டியவை. அமுத விழாவையொட்டி வெளிவர வேண்டிய இம்மலர் காலக்கோளினால் காலம் தாழ்த்தி வருகின்றபோதிலும் சிறப்புற அமைகின்றமை கண்டு மகிழ்கின்றேன். வாழ்க நாகேசுவரி!

திரு.வை.சிவானந்தராஜா
கோட்டக்கல்வி அதிகாரி,
வேலணை.

கனடா வாழ் பழைய மாணவரின் வாழ்த்துச் செய்தி

******

எமக்குக் கல்வி அறிவை ஊட்டிய நாகேஸ்வரி தாயின் மடியில் 1922ஆம் ஆண்டு முதல் எத்தனையோ அதிபர்கள் கடமை யாற்றி உள்ளார்கள். அவர்களில் என் நினைவில் உள்ளவர்கள் திருவாளர்கள் இ.மருதையினர், அ.பொன்னுத்துரை, ச.குமரேசையா, சு.இ.பொன்னையா, கு.கணேசலிங்கம், ச.பாலேந்திரன் மற்றும் தற்போதைய அதிபர் மு.சத்தியசீலன் இவர்கள் எல்லோரும் அவர்களின் காலத்தில் மிகவும் திறம்பட இயங்கி ஆரம்ப பாடசாலையாக இருந்த எம் நாகேஸ்வரி மகா வித்தியாலயமாகத் தரம் உயர்ந்து 700 பிள்ளைகளோடு வானோங்கி நின்றதை நினைத்துப் பார்க்க உள்ளம் பூரிக்கின்றது.

பொல்லாத இடப்பெயர்வினால் மாணவர் மிகவும் குறைவடைந்த பின்னரும் பாடசாலையைக் கொண்டு செலுத்திய அதிபர்கள் கு.கணேசலிங்கம், ச.பாலேந்திரன் மற்றும் தற்போதைய அதிபர் மு.சத்தியசீலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர். அதிபர் மு.சத்தியசீலன் தனது சுகவீனத்தோடு பல வருடங்கள் சேவையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுச் செல்வதையிட்டு மனம் வருந்தினாலும் அவர் புதிய பாடசாலையில் இன்னும் திறம்பட இயங்க சரவணை சேவா மன்றம் கனடா கிளையின் சார்பில் எங்கள் வாழ்த்தையும் நன்றியையும் அன்பையும் தெரிவிக்கின்றேன். பரிசுத் தினத்துடன் கூடிய **"நாகேசுவரி"** மலரும் மணம் வீச உள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சி.

மேலும் எங்கள் நாகேஸ்வரி இன்னும் 8,9 வருடங்களில் நூற்றாண்டைக் கொண்டாட இருக்கின்றாள். எனவே நாங்கள் இப்போது இருந்தே ஆயத்தங் களைச் செய்ய வேண்டும் என்று பழைய புதிய அதிபர்களையும் எம்மூர் மக்களை யும் கேட்டுக் கொள்கின்றேன். எமது கனடா கிளை எந்த உதவியையும் செய்யக் காத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

11 Malborough Road,
Markham ON,
L6B OE9, Canada.
September 23.2013

நாகேஸ்வரியின் மைந்தன்
சீ.சண்முகராஜன்
சரவணை சேவா மன்றம் - கனடா.

வாழ்த்துச் செய்தி

******

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் எடுக்கும் பரிசளிப்பு விழாவிற்கும் பரிசளிப்பு விழா மலருக்கும் வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரும்மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் வித்தியாலயம் 1928இல் ஆரம்பிக்கப்பட்டு இன்று 2013இல் தனது 85வது அகவையைக் கடந்து இக்கிராம மக்களுக்கு அளப்பரிய சேவையைச் செய்து மிளிர்ந்து வருகின்றது.

கல்வி ஊடாகவே மனிதர் பூரணத்துவமாகின்றார். அதுபோலவே சமூகத்தில் நற்பிரசையாக வாழ வைப்பதும் கல்வியே. இத்தகைய கல்வியை கல்லூரி யூடாகவே பெறுகின்றோம். எம்மை அறிவூட்டி வளர்த்து ஆளாக்குவதினால் கல்லூரியை அன்னையெனப் போற்றுகின்றோம். இதன் மைந்தர்கள் பல துறைகளில் கற்று உலகின் பல பாகங்களிலும் பரந்து புகழ் பரப்பி வருகின்றனர். கல்லூரிக்காக பல சேவைகளையும ஆற்றி வருகின்றார்கள்.

சரவணை நாகேஸ்வரி கல்லூரி அன்னை எனக்கு ஆரம்ப அடிப்படைக் கல்வியை ஊட்டி வளர்த்தவள். அதற்கு ஆசிரியர்களும் அதிபரும் நன்கு சேவை யாற்றி ஊக்குவித்தனர். அவர்களை இந்நேரத்தில் மனதில் இருத்திப் போற்று கின்றேன்.

பரிசளிப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இதற்காக முன்னிற்கும் அதிபர், ஆசிரியர் மற்றும் கல்லூரிச் சமூகத்தினரைப் பாராட்டு வதுடன் அவர்கள் சேவை என்றும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

நன்றி.

திரு.கு.கணேசலிங்கம்,
முன்னாள் அதிபர்.

வாழ்த்துச் செய்தி

******

எண்பது ஆண்டுகளுக்கு மேலாக மாணவ மணிகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்கி வருகின்ற யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய அன்னையின் மலராகிய **"நாகேசுவரி"** பரிசளிப்பு தின நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சரவணைக் கிராமத்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலுக்கு மிக அருகில் அமைந்துள்ள எமது நாகேஸ்வரித்தாய் பல இக்கட்டான சூழ்நிலையிலும், இடப்பெயர்வு காலப்பகுதியிலும் இடைவிடாது கல்விச் சேவையை வழங்கிய பெருமைக்குரியவள்.

நான் அதிபராக இருந்த காலப் பகுதியில் பல இடர்ப்பெயர்வுகள் ஏற்பட்ட போதிலும் வேறு இடங்களுக்கு பாடசாலையைக் கொண்டு சென்று நடாத்த ஒத்துழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் மிக்க நன்றி கூறுகின்றேன்.

மேலும் **"இதனை இதனால் இவன் முடிப்பன் என ஆய்ந்து அதனை அவன் கண் விடல்"** என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கிணங்க தற்போது இப்பாடசாலை அதிபராக இருந்து வழி நடாத்துகின்ற திருவாளர் மு.சத்தியசீலன் அவர்களையும் அவரது ஆசிரியர் குழாத்தையும் அன்புடன் பாராட்டுவதோடு பரிசளிப்பு விழா, **"நாகேசுவரி"** மலர் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.ச.பாலேந்திரன்
ஓய்வுபெற்ற அதிபர்.

வாழ்த்துச் செய்தி

******

எனது முதல் நியமனப் பாடசாலையான தீவகத்தில் பழமையும், பெருமையும் மிக்க யா/சரவணை நாகேசுவரி மகா வித்தியாலயத்தினால் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன். அதன் புகழ் பார் எங்கும் பரவ அயராது உழைத்த நிறுவுனர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

ஒரு நாடு வளர்ச்சியடைய கல்வி மிக அவசியமானது. இதனை கிராம பிரதேச மட்டத்தில் இருந்து கட்டியெழுப்ப வேண்டும். ஆசிய நாடுகளில் இலங்கை எழுத்தறிவு வீதத்தில் முன்னிலை வகிக்கின்றது. எனவே இங்குள்ள மக்கள் கல்விக்கு முதல் இடம் வழங்குகின்றனர். அதற்கு பாடசாலைகள் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது. அவ் வரலாற்று சாதனைகளை பதிவு செய்து கொள்வதற்கு இவ் வகையான வெளியீடுகள் அவசியமாகின்றன. அவ் வகையில் இம் மலரும் வரலாற்று ஆவணமாகத் திகழும் என்பது திண்ணம்.

இந்நிலை மென்மேலும் வளர வேண்டும் என்று பாடசாலைக்கு அருகில் இருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் பாதங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

திரு.சி.ஜெயவரதன்
ஆசிரியர்,
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.

பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளரின் (SDC)

வாழ்த்துச் செய்தி

******

புகழ் பரப்பும் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய பரிசுத் தினத்தை முன்னிட்டு **"நாகேசுவரி"** மலர் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. நீண்ட ஒழுக்கமுள்ள கல்விப் பரம்பரையை உருவாக்கிய இப் பாடசாலை தனது சீரிய பணியின் தொடராக இம்மலரை வெளியிடுகிறது. மாணவர்களை உற்சாகப்படுத்துவதுடன் பெற்றோர், பழைய மாணவர்களை பள்ளியுடன் இணைக்கும் பாலமாக இம்மலர் திகழும் எனக்கூறித் தொடர்ந்து பல வளங்களைப் பெற்று வளர்ச்சிபெற வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு கு.தயானந்தன்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் (SDS) வாழ்த்துச் செய்தி

******

சரவணை ஊர் செய் தவத்தில் நிமிர்ந்து நிற்கும் எமது பாடசாலையின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டது. இச் சங்கத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

இச் சங்கம் பாடசாலையின் பல்வேறு பௌதீக, கல்வி வளர்ச்சியில் தனது பணியினை செவ்வனே ஆற்றுகின்றது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் முயற்சியால் **"நாகேசுவரி"** மலர் பரிசுத் தினத்தில் வெளிவருவதில் பெருமைப்படுவதோடு தொடர்ந்தும் வெளிவர வேண்டும் எனக் கூறி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

நன்றி

திரு.சி.நடேசமூர்த்தி,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

அதிபரின் உள்ளத்திலிருந்து.....

******

அன்னை நாகேஸ்வரி அவள் தம் புதல்வர்கள் ஆனந்தமாக அமுத விழாவுடன் கூடிய பரிசுத் தினத்தைக் கொண்டாடு கின்றாள். 1928இல் அன்னை நாகேஸ்வரியை தனது காணியில் உருவாக்கிய பெருமை அமரர் திரு.கா.விநாசித்தம்பி அவர்களையே சாரும். அரசு 1961இல் பாடசாலைகளை கையேற்கும் வரை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துடன் சேர்ந்து கருத்துடன் காத்த பெருமையும் அவரையே சாரும்.

ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற மகுட வாசகத்தினைப் போற்றி, கடமையாற்றி, வாழ்ந்து காட்டிய பேராற்றல் மிக்க அதிபர்களையும், நல்லாசிரியர்களையும் தன்னகத்தே கொண்டிருந்தமை ஊர் செய்த தவமே ஆகும். அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களதும் அளப்பரிய சேவைகளை இந் நேரத்தில் நாம் அனைவரும் நினைவு கூர வேண்டியவர்களாக உள்ளோம். இங்கு கல்வி கற்பவர் பலர் நாட்டிற்கு உகந்த நற்பிரஜைகளாக இன்றும் வாழ்ந்து மணம் பரப்புகின்றனர்.

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் பல்வேறு இடங்களிலும் செயற்பட்ட பாடசாலை மீண்டும் 1996இல் தனது சொந்த இடத்தில் மெல்ல மெல்ல துளிர்விட்டு மீள்எழுச்சி கண்டு இன்று ஆலமரம் போல் செழித்து காட்சி அளிக்கின்றது. தற்போது மாணவர்கள் நூறு வரையில் கல்வி கற்கிறார்கள். அதிபராகிய எனது தலைமையில் நிரந்தர ஆசிரியர்களாக திரு.க.ஆதவன், திரு.கு.பாலஷண்முகன், திரு.ச.சபாகரன், திருமதி.கேமலதா கண்ணதாசன், திருமதி.றொக்ஷினி அருள்ஞானரட்ணம், திருமதி.சிந்துஜா கௌறீதரன், திருமதி.ஸர்மினி கனேஸ்வரன், திருமதி.கல்பனா சந்திரசேகரனும், பகுதி நேர ஆசிரியராக திரு.த.கபிலநாதனும், ஒப்பந்த ஆசிரியராக திருமதி.பிரகல்யா வினோகாந்தனும் உதவி ஆசிரியர்களாக திருமதி.யாழினி சுதாகரன், திருமதி.பத்மாஷினி செல்வராசா ஆகியோரும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் சிறப்பாக மாணவர் களுக்கு கல்வி புகட்டி வருகிறார்கள்.

எமது கல்லூரியின் முதல்வர்

திரு.முருகேசு சத்தியசீலன் Sp.Trd.Agriculture S.L.P.S 2.I

ஆரம்ப பிரிவுக்குரிய ஒன்றிணைந்த பாடங்களும் இடைநிலைப் பிரிவிற் குரிய பாடங்களும் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்பபிரிவு மாணவர்கள் தொடர்ச்சியாகத் தமது கல்வியைப் பெற்று வருவதனால் கல்வித் தரம் படிப்படியாக முன்னேறி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இடைநிலை மாணவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து வருவதால் கல்வி மட்டம் குறைவாகவே உள்ளது. கல்வியின் தரத்தினை உயர்த்த எமது ஆசிரியர்கள் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள்.

இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் கோட்டமட்டம் மற்றும் வலய மட்டத்திலும் சாதனைகள் படைக்கிறார்கள். பிள்ளைநேயப் பாடசாலைகளுக்கான போட்டியில் B தரத்திற்கான சான்றிதழ் **"யுனிசெவ்"** நிறுவனத்தால் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களது அடைவு மட்டத்தை உயர்த்தவும் ஆசிரியர் வளத்தைப் பெருக்கவும் மாணவர் வரவின்மையைச் சீராக்குவதற்கு பெற்றோர் களது ஆர்வம் இன்றியமையாததாகும்.

கனடாவில் உள்ள சரவணை சேவா மன்றம் எமக்கு பல வழிகளிலும் உதவியும் ஆலோசனையும் வழங்கி வருகின்றது. பாடசாலை சுற்றாடல் மதில் அமைக்கவும், மாணவரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நீர்த்தாங்கி அமைத்து உதவியுள்ளமையும். பரிசளிப்பு விழா விற்கான அனுசரணையையும் தொடர்ந்தும் வழங்கி வருகின்றமை பேருவகை அளிக்கின்றது.

எனது சேவைக் காலத்தில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் என்னாலான சேவையை நாகேஸ்வரி அன்னைக்கு ஆற்றியுள்ளேன் என பெருமைப்படுகின்றேன். இக்கால வேளையில் என்னுடன் தோளோடு தோள் நின்ற ஆசிரியகுழாத்தின் ஒத்துழைப்பையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களையும் நலன்விரும்பிகளையும் எமது கல்வித் திணைக்களத்தைச் சார்ந்தோரையும் பாராட்டி இவ்விழா சிறப்புற **"நாகேசுவரி"** மலரும் வெளிவருகின்றது. அன்னையின் நூற்றாண்டு விழாவை நோக்கிய பயணத்தில் சரவணை கதிர்வேலாயுத சுவாமியின் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.மு.சத்தியசீலன்,
அதிபர்.

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து

******

எங்கள் சரவணைக் கிராமத்தின் ஏற்றம் மிகு பள்ளித் தலமாக விளங்குவது சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம். 80 ஆண்டுகளைக் கடந்து கம்பீரமாகக் காட்சி தரும் நாகேஸ்வரி அன்னையின் 2013ஆம் ஆண்டு நடைபெறும் நிறுவுனர் நினைவு தினத்தையும் பரிசுத் தினத்தையும் முன்னிட்டு **"நாகேசுவரி"** என்ற மலர் வெளிவருகின்றமை எங்கள் யாவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. 2004இல் பவள விழாவைக் கண்டும் 2009இல் அகவை 80ஐக் கடந்தும் வீறுநடை போடுவது பேருவகை தருகின்றது. காலதாமதமாகி வருகின்றதாயினும் பல்வேறு அம்சங்களையும் தாங்கி வருவது ஆறுதல் தருகின்றது.

சரவணை ஊர் செய் தவத்தின் பயனாக இம்மலர் தொடர்ந்து சுடர் விட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கல்வித்துறைசார் பெருந்தகைகளின் ஆசிச் செய்திகள் அதிபருடைய வாழ்த்து மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் இம் மலர் சிறக்க பல வகைகளிலும் ஒத்தாசை புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இதழாசிரியர் என்ற முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாகேஸ்வரித் தாயின் வளர்ச்சிப் பாதையில் பல் பரிமாணங்களையும் சுருங்கிய வரலாறாகவும் ஆளுமை வெளிப்பாட்டினைக் காட்டுவனவாக மாணவர் ஆக்கங்களும் அறிவியல் வழிகாட்டிகளாக ஆசிரியர்களின் ஆக்கங்களும் இடம் பெற்றுள்ளன. ஆக்கங்களைத் தெரிவுசெய்து செப்பமாக்கி வழங்கிய ஆசிரிய நண்பர்களுக்கும் அர்ப்பணிப்போடு பேராதரவு நல்கிய அதிபர் அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றிகள்.

ஆசிரியர் குழாம்

நிற்போர் : திருமதி.றொக்ஷினி அருள்ஞானரட்ணம் , திருமதி.சிந்துஜா கௌரீதரன் , திருமதி.கேமலதா கண்ணதாசன், திருமதி.பிரகல்யா வினோகாந்தன்

இருப்போர் : திரு.தளையசிங்கம் முதலியார் கபிலநாதன், திரு.கனகரட்ணம்.அதவன், அதிபர் திரு.முருகேசு சத்தியசீலன், திரு.சபாரத்தினம் சபாகரன், திரு.குமரேசன் பாலசண்முகன்

புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்ந்தாலும் சரவணைக் கிராமத்திலும் நாகேஸ்வரி அன்னையிடத்தும் உரிமையும் பற்றும்கொண்டு ஊன்றுகோலாய் நின்று உதவிக்கரம் நீட்டும் **"சரவணை சேவா மன்றம்"** உள்ளிட்ட அத்தனை உள்ளங்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மலர் சிறக்க விளம்பரம் தந்தவர்கள் மற்றும் சிறப்புற அச்சிட்டு வழங்கிய சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. நூற்றாண்டு விழாவும் விழா மலரும் ஒளி மிகுந்த நாகேசுவரியை வெளிக் கொணரும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து நாகேசுவரி இதழின் இதழாசிரியர் உளப்பகிர்வை நிறைவு செய்கிறேன்.

நன்றி.

இதழாசிரியர்

திருமதி.கேமலதா கண்ணதாசன்

பாடசாலையின் தோற்றமும் அதன் வரலாறும்

******

தோற்றம்

ஈழத்தில் அந்நியர் ஆட்சி காலத்தில் ஆங்கிலக்கல்வி வளர்ச்சியிலும் அதன் பயனாய் எழுந்த உத்தியோகப் பங்கீட்டிலும் பார்க்க அவற்றின் உள்ளீடாகிய அவர் தம் சமயம் பரப்புதல் முந்திச் சென்று கொண்டிருந்தமையால் அவ்வவ்வூர்களில் ஆதியாய் வேரூன்றி வளர்ந்து கொண்டிருந்த சைவசமயம் பல தடைகளில் அகப்பட்டு அபிவிருத்தியடையாதிருந்தது. பாதிரிப் பாடசாலைகளும் கத்தோலிக் கப் பாடசாலைகளும் உத்தியோகப் பங்கீடுகளும் அந்நியச் சமயங்களின் வளர்ச்சிக்காய் விலை போயின. இதனால் சைவப்பள்ளிகள் தொகையில் பெருக்கற்று அருகி ஆங்காங்கு ஒன்றிரண்டாய் அமைந்தன. சைவம் தன் வளர்ச்சிக்காய் இவ்வாறமைந்த பாடசாலைகள் திண்ணைப் பள்ளிகளிலும், சைவக் கோவில்களிலும், மடங்களிலும் புகலிடமாகக் கொண்டிருந்தது.

இவ்வாறான நிகழ்ச்சிகள் வயதேறிக் கொண்டிருக்க நாவலர் பெருமான் தோன்றினார். சைவத்திற்கும் செந்தமிழுக்கும் ஏற்பட்ட வறுமையைப் போக்க முயன்று நான்கு சைவப்பிரகாசங்களைத் தோற்றுவித்தார். அவர்களால் செயற் படுத்தப்பட்ட புராணபடனம், பிரசங்கம், சைவசமய நூல்கள், பிரசுரங்கள் என்பன சைவத்திற்குப் புனர்வாழ்வளித்தன. சைவம் வளர்ந்தது. செந்தமிழ் செழித்தது. பெருமானைப் பின் தொடர்ந்து சைவ வித்தியாவிருத்திச் சங்கம் எழுந்தது. நியாயவாதி திரு.சு.இராசரத்தினம் அவர்கள் அதன் தலைவரானார். வடமாகாணத் திலும் தீவுப் பகுதியிலும் பல பல சைவப் பாடசாலைகள் ஆரம்பித்தன.

அவற்றில் ஒன்றாக அமைந்தது சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை. இவ் வித்தியாசாலைக்கு வடகீழ்த் திசையில் ஏறக்குறைய நூற்று ஐம்பது யார் தூரத்தில் பிரதான வீதியோரமாக அமைந்த பாதிரி பாடசாலையும், மேற்குத் திசையில் இருந்த கத்தோலிக்க பாடசாலைகளும் அக்காலத்தில் பாடசாலைகளுக்கிடையில் இருக்க வேண்டிய தூரம் பற்றிய சட்டமும் நாகேஸ்வரியை ஏற்கனவே கருக் கொள்ளவிடாது தடுத்துக் கொண்டிருந்தன. முழுக்க முழுக்கச் சைவ மக்களைக் கொண்ட சரவணைக் கிராமத்திற்குப் பெரும் மனத்துன்பத்தைத் தந்து கொண்டிருந்தன இவை.

இக்குறைபாட்டுத் துன்பம் தீரச் சரவணையில் நொத்தாரிசு இருந்த திரு.கா.விநாசித்தம்பி அவர்கள் தனது சீதன நிலத்தில் நாகேஸ்வரி இப்போது இருக்கும் இடத்திற்கு வடகீழ்த் திசையில் வீதியின் அருகில் 1922ஆம் ஆண்டில் ஓர் ஓலைக் கொட்டிலில் சைவப் பெரியார்களின் ஆதரவுடன் பாடசாலை மகேஸ்வரி வித்தியாரம்பம் என ஆரம்பித்தார். அருகாமையிலுள்ள பாதிரி பாடசாலையில் படித்த மாணவர்கள் யாவரும் சைவ சமயத்தவர்கள் ஆகையால் ஆவலுடன் புதிய பாடசாலையில் சேர்ந்தனர். இந்நிகழ்ச்சியால் பாதிரி பாடசாலை மறைந்தது. நாகேஸ்வரியின் வளர்ச்சி ஆரம்பமானது. ஏறக்குறைய இரண்டு வருடங்களின் பின் நியாயவாதி திரு.சு.இராசரத்தினம் அவர்களை முதல்வராய்க் கொண்ட சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இப் பாடசாலையை நொத்தாரிஸ் அவர்களால் வழங்கப்பட்ட 10 பரப்புக் காணியுடன் பொறுப்பேற்றது. ஊராரின் பேருதவியுடன் (பணம், கல், மணல், பனை மரம்) "ப" வடிவத்தில் நிரந்தரக் கட்டடம் அமைந்த பாடசாலைக்கு நொத்தாரிசு அவர்களின் மனைவியின் ஞாபகார்த்தமாக அவர் தம் பெயராகிய "நாகேசுவரி" என்பது 1928இல் நாகேஸ்வரி வித்தியாலயமானது.

ஆரம்பித்த காலம் தொட்டு சில வருடங்களாக ஐந்தாம் வகுப்பு வரை வகுப்புக்களைப் பெற்று ஆரம்ப பாடசாலைத் தரத்தில் இருந்தது நாகேசுவரி.

அதிபர்கள்

இவ்வாறு ஆரம்பித்த நாகேஸ்வரிக்கு அதிபர்களின் சேவைகள் ஆரம்ப மாகின. கொடிகாமத்தைச் சேர்ந்த திரு.முருகேசு அவர்கள் தலைமை ஆசிரியராக (1928 – 1929) இரண்டு வருடங்கள் கடமையாற்றினார். இவர்கள் மாணவரின் கல்வி வளர்ச்சிக்காகப் பிற்பகலிலும் இராக் காலத்திலும் தேவை ஏற்படும் போது வகுப்புக்கள் வைத்துக் கற்பித்துப் பாடசாலைத் தரத்தை உயர்த்தப் பெருஞ் சேவை செய்தார்.

இவரைத் தொடர்ந்து புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு.சீனித்தம்பி அவர்கள் தலைமை ஆசிரியர் ஆனார். இவர்களும் பாடசாலையின் முன்னேற்றமே தம் நோக்கமாகக் கொண்டு (1930 – 1931) இரண்டு வருடங்களாகத் தூய்மையான தமது சேவையைப் புரிந்து மகிழ்ந்தார்.

இவர்களின் பின்பு ஆசிரிய மணி பண்டிதர் திரு.இ.மருதையனார் அவர்கள் 1932இல் தலைமை ஆசிரியரானார். இவருடைய காலம் நாகேஸ்வரியின் கல்வி வளர்ச்சியின் பொற்காலமென அயற் தீவகங்களும் போற்றிப் புகழ்ந்தன. இயல்பாகவே அமைந்த நுண்மான் நுழைபுலத்தால் இலகு வழி கண்டு மாணவர் களை அவாவி அவதானம் குலையாமல் சுவை ஊற உளத்தில் பதியத்தக்கதான படிப்பித்தல் அவருக்கே உரித்தான தனித்துவமாகும். வீணாக ஒரு சொற் கலவாது வேண்டிய சொற்களை அமைத்துப் பேசுதலும் கற்பித்தலும் அவருக்கு இயல்பான இன்னொரு திறமையாகும். இவற்றினால் நாகேஸ்வரியும் தனித்துவம் பெற்ற தரத்தில் ஒளிர்ந்தது.

இவர் தம் முயற்சியால் ஐந்தாம் வகுப்பு வரை இருந்த நாகேஸ்வரி சிரேட்ட தராதரப் பத்திர வகுப்பையும் பெற்றது. புங்குடுதீவு, நயினாதீவு முதலிய தீவகங் களிலும் நாரந்தனை, வேலணை, கரம்பொன் முதலிய அயற்கிராமங்களி லிருந்தும் மாணவர் பலர் வந்து கற்றுத் தராதரப் பத்திரம் பெற்றுச் சென்றனர். வருடா வருடம் புலமைப் பரிசிற் பரீட்சையில் ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க அதிக தொகையான மாணவர்கள் சித்தியெய்திக் கொண்டிருந்தனர். இங்கு விவேகானந்த சபை நடத்தும் சைவசமயப் பரீட்சைகளிலும் வகுப்பு வகுப்பாக முழு மாணவர்களும் சித்தியெய்திக் கொண்டிருந்தனர். சைவம் பாடசாலை யிலன்றி அதனைக் கிராமம் முழுவதும் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவ் வளர்ச்சிக்கு உதவியது பாடசாலையை மையமாகக் கொண்டு உதித்த "சைவ இளைஞர் சபை" ஆகும். சமீபத்திலுள்ள கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் பெரியபுராணம் முற்றோதிப் பயன் கூறல் ஆரம்பித்து நாற்பதாம் நாளில் நிறைவு பெற்றது. இந் நிகழ்ச்சி வேலணை மேற்கு, ஊர் சைவசித்தாந்த அறிஞர் செந்தமிழ் வல்லார் ஸ்ரீமான் தம்பு உபாத்தியாரை முதல்வராகக் கொண்டு நிகழ்ந்தது. அந் நாட்களில் அப் பெரியாரிடம் இருந்து மாணவர் பலர் இராகங்களைக் கற்றுக் கொண்டனர். இதற்கும் அதிபர் அவர்களே காரணம்.

யாழ் நகரில் வருடா வருடம் இந்து மகா சபையினரால் தமிழ் நாட்டிலிருந்து சொற்பொழிவுகளுக்காக அழைக்கப்படும் சைவ அறிஞர்களைத் தவறாது அழைத்து வந்து நாகேஸ்வரியிலும் சொற் பெருக்காற்ற வைப்பது அதிபர் அவர்



ஸ்தாபகர்

பிரசித்த நொத்தாரிசு

உயர்திரு.கா.வினாசித்தம்பி அவர்கள்

புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில்



திரு.க.முருகேசு
1928 - 1929



திரு.ப.சீனித்தம்பி
1930 - 1931

பண்டிதர் ஆசிரியமணி
திரு.இ.மருதையினார்
1932 - 1961

பண்டிதர்
திரு.அ.பொன்னுத்துரை
1962 - 1965

வித்துவான்
திரு.சு.இ.பொன்னையா
1966 - 1972

பண்டிதர்
திரு.ச.குமரேசையா
1973 - 1981

திரு.வி.இராமலிங்கம்
1982 - 1986

திரு.கு.கணேசலிங்கம்
B.A, Dip.in.Ed,SLPS - 1
1987 - 1996

திரு.ச.பாலேந்திரன்
1997 - 2004

திரு.மு.சத்தியசீலன்
S.L.P.S - 2 -1
2004 தொடக்கம்

களின் அவா நிரம்பிய சேவையாக இருந்தது. இந்த வகையில் ராவ்சாகிப் சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் B.A.B.L அவர்களாலும், பெரியபுராண உரை ஆசிரியர் சி.கே சுப்பிரமணிய முதலியார், சோமசுந்தர பாரதியார், சித்தாந்த சமாச பாலசுப்பிரமணிய முதலியார், சைவபோத சிவபாதசுந்தரனார், கற்பனைக் களஞ்சியம் பண்டிதர் மகாலிங்கசிவம் போன்ற பேரறிஞர்களாலும் சைவச் சொற்பெருக்குகளைக் கேட்டு உவந்தது சரவணைக் கிராமமாகும்.

இவற்றோடு அமையாது நாயன்மார் குருபூசை, சரஸ்வதி பூசை, பௌர்ணமி தோறும் சைவப் பெரியார்களின் சொற்பொழிவுகள், சமயத்தீட்சை, கலை நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன சிறப்புற நிகழ்வதற்கு வழிவகுத்தது அதிபர் அவர்களின் பெருஞ்சேவை. இவைகளினால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பொறியியலாளர்களாகவும், வைத்தியகலாநிதி களாகவும், கணக்காளர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், பண்டிதர்களாகவும், பாவலர்களாகவும், ஆசிரியமணிகளாகவும் திகழ்ந்து கொண்டிருப்பது அதிபர் அவர்களின் பரந்து அகன்று பயன்கொண்டு இருக்கின்ற பெருஞ்சேவைக்கான சான்றுகளாகும்.

அவர்களது தனித்துவமான பெருந்திறமை அகில இலங்கை முழுவதும் பரந்து ஒளி வீசி நின்றது. இப்பெருந்தகைமைகளால் அக்காலத்தில் மிக அரிதாகப் பெறக்கூடியதாக இருந்த J.P பட்டம் மிக இலகுவாக அதிபரைச் சேர்ந்தது. அரசினரால் பாடசாலைகள் பெறுப்பேற்கும் வரை இப் பாடசாலையில் முகாமை யாளராக இருந்த பாடசாலை ஆரம்பகர்த்தா நொத்தாரிசு திரு.கா.விநாசித்தம்பி அவர்கள் அதிபர் அவர்களுக்கு இணைபிரியா நட்புரிமை பூண்டிருந்தார். இதுவும் பாடசாலை முன்னேற்றத்திற்கும் கிராம எழுச்சிக்கும் காரணமாக அமைந்தது. அதிபர் அவர்களின் ஆட்சி 30 வருடங்கள் நிலைத்து ஒளி வீசியது. நாகேஸ்வரி பொன்னெனப் பிரகாசித்து ஒளி கண்டது.

வேலணை மத்திய மகா வித்தியாலயம் ஆரம்பிக்க இப் பாடசாலையில் 5ம் வகுப்புக்களுக்கு மேல் சட்டப்படி அங்கு சென்றன. இந்நிகழ்வு இப் பாடசாலையில் 5ம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சைப் பெறுபேற்றின் தொகையையும் தரத்தையும் முன்னரிலும் பார்க்க வலுப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆசிரியமணி பண்டிதர் திரு.இ.மருதையனார் அவர்களின் பின் வேலணை ஊரைச் சேர்ந்த பண்டிதர் திரு.அ.பொன்னுத்துரை அவர்கள் அதிபரானார். கூர்மை யாக அதிகரித்த விவேகம் காரணமாகப் பள்ளிப் பருவத்தில் பலமுறை இரட்டை வகுப்பேற்றங்களைப் பெற்றவர் இவர். பெற்றாரதும், அக்காலத்திலிருந்த பாராளு மன்ற உறுப்பினர் திரு.வ.நவரத்தினம் அவர்களினதும் ஆதரவுகள் இருந்தமை யால் பாடசாலைக்குத் தேவையான நிலப்பரப்பை சுவீகரித்தலில் பலவகைச் சிரமங்களைக் கடந்து வெற்றி பெற்றதோடு புதிய கட்டடம் ஒன்றையும் பெற்று இட நெருக்கடியைத் தீர்த்து வைத்தார். இவர்களால் சுவீகரிக்கப்பட்ட நிலம் விளையாட்டு அரங்காக அமைந்தது. இவர்கள் அதிபராக அன்றி முன்னொரு காலத்தில் உதவி ஆசிரியராகவும் இருந்து சேவை செய்தவராவார்.

அடுத்து அதிபரானார். சரவணை ஊரைச் சேர்ந்த பண்டிதர் சு.இ.பொன்னையா ஆவார். ஆசிரியமணி காலத்தில் உதவி ஆசிரியராக இருந்து 5ம் தரப் புலமைப் பரீட்சையில் வருடா வருடம் அதிகமான மாணவர் வெற்றி பெற வழிவகுத்தவரும் ஆவர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களிடமும் வித்துவான் ந.சுப்பையாபிள்ளை அவர்களிடமும் நன் மாணாக்கனாய்ச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறை போகக் கற்றதால் பாலபண்டிதர் வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள் என்பவற்றுக்குப் பாடஞ் சொல்லுந் திறமையும் அவரில் ஒளி வீசியது. இத்திறமை நாகேஸ்வரி மாணவர்களிலும் தமிழ்ப் பாடங்களில் ஊறித் திகழ்ந்தது. இவர் பெற்றோரின் பெரும் மதிப்புக்குரியவர். பழைய மாணவன் திரு.க.பாலசிங்கம் அவர்களின் உதவியால் பாடசாலை முன்பக்க மதிலையும் பெற்றோர் ஆசிரியர் சங்க உதவியினால் கட்டடம் ஒன்றையும் நிறுவினார். தமது ஓய்வு நேரங்களையெல்லாம் மாணவருக்குப் பாடஞ் சொல்வதில் கழித்து மகிழ்ந்த பெருந்தன்மையுடையவர். இச்செயலால் பாடசாலை யின் தரம் பெரும் மதிப்புக்குரியதாக வளர்ந்தது. வகுப்புக்கள் 10ம் வகுப்பு வரை தோன்றின.

அடுத்து வந்த அதிபர் ஆசிரியமணி அவர்களினதும் வித்துவான் அவர்களி னதும் ஆரம்பக் கல்வி தொட்டு மாணவராக இருந்த பண்டிதர் ச.குமரேசையா ஆவர். அபிவிருத்திச் சங்க உதவியை வருடா வருடம் பெற்றுக் கட்டடத் திருத்தங்

களையும் அரசினரின் உதவியால் இரு கட்டடங்களையும் மலசலகூடங்களையும் விஞ்ஞான அறை ஒன்றையும் பாடசாலையில் உருவாக்கினார். இவர் காலத்தில் உள்ளூரிலும் கொழும்பிலும் பழைய மாணவர் சங்கம் நிறுவப்பட்டது. இவருடைய காலத்திலேயே பாடசாலையின் பொன்விழா 15.01.1980இல் நடைபெற்றது. இவ் விழாவிற்கு பழைய மாணவன், தபாலதிபர், சட்டத்தரணி அமரர் திரு.செ.சச்சிதானந்தசிவம் அவர்கள் பெரும் உதவியளித்தார். விழாவுக் கான பணத்தில் பெரும் பகுதியைக் கொழும்பு நகரில் சேர்த்து உதவினார். பழைய மாணவன் சாட்டற் எக்கவுண்டன் அமரர் இ.வி.தளையசிங்கம் B.A,B.S.C, F.C.A அவர்கள் பாடசாலைக்கு வெளியரங்கு ஒன்றைச் சொந்தச் செலவில் அழகாக அமைத்து உதவினார். பழைய மாணவர் திரு.கு.கணேசலிங்கம் B.A.Dip அவர்கள் தம் செலவில் பாடசாலைக்கான மின்இணைப்பை ஏற்படுத்தி உதவினார். பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரம் உயர்ந்தது.

அதிபர் ஓய்வுபெறப் பழைய மாணவர் திரு.கு.கணேசலிங்கம் அதிபரானார். இளமையும் அறிவும் ஆற்றலும் பாடசாலைப் பற்றும் உந்தச் சேவையாற்றிக் கொண்டு இருக்கும் பொழுது மேற்படிப்புக்காகப் பல்கலைக்கழகம் சென்றார். இவருடைய காலத்திலேயே முதல் முதலாக பச்சை, சிவப்பு, நீலம் என இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அதிபர் அவர்கள் மேற்படிப்புக்குச் செல்ல திரு.வி.இராமலிங்கம் அவர்கள் 1982ல் அதிபரானார். இவர்கள் பெற்றோர், ஆசிரியர் சங்கத்தால் நிறுவப்பட்ட நிரந்தரமற்ற 100 x 20 அளவு கொண்ட மண்டபத்தை அரசினரின் உதவி பெற்று நிரந்தக் கட்டடமாக அமைத்தார். இவர் பாடசாலை கல்வி வளர்ச்சியில் நான்கு ஆண்டுகள் (1986 வரை) அதிபராகக் கடமை ஆற்றி ஓய்வுபெற்றார்.

அதிபர் ஓய்வுபெற முன்பு ஒரு வருடகாலமாகச் சேவையாற்றிய திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் 05.05.1987இல் மீண்டும் அதிபரானார். மேற்படிப்பை நிறைவேற்றி வந்த உன்னிப்பு உந்த வித்தியாலயத் தரத்தை மேல்மேலும் உயர்த்திக் கொண்டு இருக்க வேண்டுமென்ற சேவை மனப்பாங்கு பரப்பத் தனக்கு ஏடு தொடக்கித் தந்த அன்னை என அன்பும் பற்றும் என்றும் ஊக்கத்

தமது ஓய்வுநேரம் முழுவதையும் வித்தியாலயச் சேவைக்காக உழைத்துக் கொண்டவர். கலை விழா, தமிழ்த்தினப் போட்டி, விளையாட்டுப் போட்டி என்று இவை எல்லாவற்றையும் முன்னின்று செயற்படுத்தி 20.06.1990 பரிசளிப்பு விழாவைப் பெரும் நிகழ்வாக நடாத்தியவர்.

வித்தியாலயத்தைச் சூழ்ந்துள்ள மதில், வகுப்பறைகள், குழாய்நீர் வசதி என்பவற்றை ஆக்கி நிறைத்து இவ்வளவு காலமும் இல்லாதிருந்த பாடசாலைக்கு உட்பட்ட விளையாட்டு அரங்கு ஒன்றையும் சிறுவர் பூங்கா ஒன்றையும் ஆக்கியவர். 60 x 20 அளவு கொண்ட விஞ்ஞானகூட வகுப்பறைக் கட்டடத்தை ஆரம்பித்து வைத்தவர்.

சிறந்த பேச்சாற்றல் அனைவரையும் அன்போடு அரவணைக்கும் வசீகரத் தோற்றம் கொண்ட இவரால் பாடசாலையின் நிர்வாகம் திறம்பட ஓடிய வேளையில் தான் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரிய தீவக இடப்பெயர்வு 26.04.1991ல் யாழ்ப்பாணம் நோக்கி ஏற்பட்டது. இதனால் எமது பாடசாலை உள்ளிட்ட வேலணைக் கொத்தணிப் பாடசாலைகளும் அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் கொத்தணி உபஅதிபராக இருந்து அவரது முயற்சியினால் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் மாலை நேர பாடசாலையாக இயங்கி வந்தன. ஆரம்பப்பிரிவு பாரதி பாடசாலையிலும் மேற்பிரிவு வைத்தீஸ் வராவிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. படிப்படியாக ஏனைய பாடசாலைகள் வெவ்வேறு இடங்களில் இயங்கத் தொடங்கின. எமது சரவணை நாகேஸ்வரி பாடசாலை தொடர்ந்தும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியிலும். பாரதி பாடசாலை யிலும் இயங்கின.

பின் அயலிலுள்ள கோயில் காணி துப்பரவு செய்யப்பட்டு அரச உதவியுடன் (20x100) அடி தற்காலிக கொட்டகை போடப்பட்டு ஆரம்பப் பிரிவும் வைத்தீஸ் வராவில் ஒன்றாக இயக்க வைத்து பாடவிதானம், புறப்பாடவிதானங்களில் கூடிய ஆர்வம் காரணமாக யாழ் பாடசாலைகளுடன் ஒப்பிடக்கூடியதாக 1992ல் புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் சித்தி அடைந்தனர். 1993ல் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா வைத்தீஸ்வராக் கல்லூரியில்

கொண்டாடப்பட்டது. மாணவர்கள் உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டி சாதனை படைத்தனர். இவ்வெற்றிக்கு திருமதி.ஞா.தனபாலசிங்கம், திருமதி.அ.ஆனந்ததேவன் ஆகியோர் பெரும் உறுதுணையாக இருந்தனர்.

1995 வரை சுமார் 300 வரையான மாணவர்களைக் கொண்டதாக பாடசாலை விளங்கியது. இவ் வேளையில் மீண்டும் மாபெரும் யாழ்ப்பாண இடம்பெயர்வு 30.10.1995 நிகழ்ந்தது. இப் பாடசாலை இடம்பெயர்ந்து சாவகச்சேரி விக்கினேஸ்வராக் கல்லூரியில் இயங்கியது. 1996 சித்திரை 26ல் சாவகச்சேரியில் ஏற்பட்ட இடம்பெயர்வால் அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து செல்ல உபஅதிபர் திரு.ச.பாலேந்திரன் அவர்கள் பாடசாலை நிர்வாகத்தைக் கவனித்தார். மீண்டும் 28 சித்திரை 1996ல் அனைத்து மக்களும் யாழ்ப்பாணம் திரும்ப தீவகப் பாடசாலைகளும் தமது தமது சொந்த இடங்களிற்கே சென்றுவிட வேண்டும் என அறிவித்தல் கிடைத்தது.

இந்நிலையில் உபஅதிபர் திரு.ச.பாலேந்திரன் தலைமையில் பாடசாலை வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் 20.05.1996ல் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்தது. உபஅதிபரின் விடாமுயற்சியால் எமது பாடசாலை 21.10.1996 விஜயதசமி தினமன்று 30 மாணவர்களுடனும் 7 ஆசிரியர்களுடனும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் மீண்டும் வன்னியில் இருந்து வந்து 24.02.1997ல் யா/சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆனார். நீண்ட காலமாக இவரின் உழைப்பில் உயர்ந்த எமது பாடசாலை அச்சாணி இழந்த வண்டி போல் ஆகுமே என்ற வேளையில் தான் பிரதி அதிபராகக் கடமையாற்றிய திரு.ச.பாலேந்திரன் அவர்கள் 24.02.1997ல் பாடசாலையின் அதிபரானார். புதிய அதிபரின் கடின முயற்சியால் மீண்டும் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்வு கண்டது. போக்குவரத்து நெருக்கடி பாதுகாப்புக் கெடுபிடிகளின் மத்தியில் பாடசாலையின் நிர்வாகத்தினை மிகவும் சிரமப்பட்டு இயக்கிக் கொண்டிருந்தார். அதிபர் அவர்கள் பாடசாலையின் கட்டடங்கள் சேதம் அடைந்த நிலையிலும் தளபாட பற்றாக்குறை நிலவிய போதும் அதிபர் அவர்கள் மனம் தளராது 1999ல் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் உதவியுடன் பாடசாலையினை மீள்

புனரமைப்புச் செய்ய ஆரம்பித்தார். இந்தப் பணிக்கு சரவணை ஊர் மக்களின் மனிதவலு உதவி பெறப்பட்டது. சரவணை சேவா மன்றத்தினதும் திரு.வை.பேரம்பலம் ஓய்வுபெற்ற ஆசிரிய அவர்களின் நிதியுதவி பெரிதும் கை கொடுத்தது. பாடசாலை பொறியியலாளர் திரு.க.சிவபாதம் அவர்களின் ஒத்துழைப்பும் பெரிதும் உதவியது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழா 08.03.2001ல் இடம்பெற்றது. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணைப்பாளர் பாடசாலை புனர்நிர்மாண கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

அதிபரின் தொடர் முயற்சியினால் கல்வித்துறை மட்டுமன்றி மாணவரின் விளையாட்டுத்துறை, கலைத்துறைகளிலும் ஈடுபடுத்தினார். இதன் பிரதிபயனாக 2001, 2003, 2004 ஆண்டுகளிலும் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் சிறப்புற இடம்பெற்றன.

முதற் தடவையாக பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு.இ.மருதையனார் நினைவாக பச்சை இல்லமும் பாடசாலையின் ஸ்தாபகர் திரு.கா.விநாசித்தம்பி நினைவாக சிவப்பு இல்லமுமாக இரு இல்லங்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு 2003ல் இல்ல விளையாட்டுப் போட்டி சிறப்புற நடாத்தி முடித்த பெருமை இவரையே சாரும். 2004ற்கான இல்ல விளையாட்டுப் போட்டியை 12.02.2004ல் நடாத்தி முடித்தனர்.

தமிழ்த் தினப் போட்டியில் கூட எமது பாடசாலை "காத்தவராயன் கூத்து" இல் மாவட்ட மட்டம் வரை சென்று 2003இல் சாதனை படைத்தது. பண்ணிசைப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது. இதுபோன்று ஆங்கிலத் தினப்போட்டி எனப் பல்வேறு நிகழ்வுகளிலும் பாடசாலை தன் முத்திரை யினைப் பதித்துக் கொள்ள அதிபர் அவர்கள் காரணமானார். இவரது காலத்தி லேயே (2003)ல் மாபெரும் கல்விச் சுற்றுலாவிற்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். பாடசாலைக்கென பிரத்தியேக மைதானம் பெற முயற்சிகள்

செய்யப்பட்டதுடன் பாடசாலை நுழைவாயிலுக்கு வளைவு கதவு என்பன பவள விழா ஞாபகார்த்தமாக சரவணை சேவா மன்றத்தின் (கனடா) அனுசரணையுடன் ஸ்தாபிக்கப்பட்டது.

தொடர்ந்து 2004.05.10ம் திகதி திரு.மு.சத்தியசீலன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இடப்பெயர்வின் மூலம் தீவகப் பாடசாலைகளின் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்த நிலை இப் பாடசாலையிலும் காணப்பட்டது. 127 மாணவருடன் பெறுப்பேற்று நடாத்திய காலத்தில் முன்னாள் அதிபர் திரு.கு.கணேசலிங்கம், திரு.ச.பாலேந்திரா அவர்களுடைய முயற்சி காரணமாக சேவா மன்றத்தின் பூரண ஒத்துழைப்பும் வரப்பிரசாதமாக அமையப்பெற்றது. கனடா சேவா மன்றத்தின் தலைவர் திரு.சீ.சண்முகராஜாவும் அதன் உறுப்பினர்களும் கிராம பற்றின் காரணமாக பாடசாலை வளர்ச்சியானது வலுப்பெற்றது. இதன் பயனாக இவ்வாண்டில் 143 அடி நீளமான தெற்கு பக்க மதில் அமையப்பெற்று பாடசாலை சுற்றுமதிலுடன் கூடியதாக மிளிர்ந்தது.

2005 கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் முன்னேற்றகரமான ஆண்டாகத் திகழ்ந்தது. இதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்ததுடன் மொழித்தினம், விளையாட்டுப் போட்டி, ஆங்கில தினம் போன்றவற்றில் கோட்ட, வலய மட்டங்களை வென்று பெருமை சேர்ந்தனர்.

2006இல் பாடசாலைத் தேவைக்காக சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் சேவா மன்றத்தால் நீர்த்தாங்கி அமைத்து பாடசாலைக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மெய்வல்லுநர் திறனாய்வில் நீண்ட காலத்திற்கு பின் மரதன் ஓட்டம், பழைய மாணவர்கள், பெற்றோர் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் தூர இருந்து வரும் மாணவர் களிற்கு இரட்சணியசேனை மூலம் 5 துவிச்சக்கரவண்டிகள் பெற்று வழங்கப் பட்டது. இவ்வாண்டில் மீண்டும் ஓர் இடப்பெயர்வு சூழ்ந்து கொண்டமையால் மாணவர் தொகையில் சற்று மாற்றம் ஏற்பட்டு 112ஆகக் குறைவடைந்தது. எனினும் பாடசாலை வளத் தேவைகளைப் பெறுவதில் பின்நிற்கவில்லை. இக் கால கட்டத்தில் போக்குவரத்து ஸ்தம்பிதம் இப் பிரதேசத்தில் பெரும் பாதிப்பை சகலருக்கும் ஏற்படுத்தியது. இவ்வாண்டில் எமது பாடசாலையில் இதய சிகிச்சை

பெற்ற வசந்தகுமார் யதுசன் என்ற மாணவனுக்கு எனது வேண்டுகோளிற்கு இணங்க சேவா மன்றத் தலைவர் (கனடா) அவர்கள் மூலமாக சிகிச்சைக்கான நிதியினைப் பெற்று அம் மாணவனின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. இந் நேரத்தில் மன்றத்தின் சேவையை நினைவு கூருகின்றேன்.

2007இல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவு திட்டநிதி மூலம் கணினி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு கணனிக் கற்கை ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டில் கணினி அறை ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் பாடசாலைக்கான மின்சாரத்தை திரு.திருமதி.சோ.கந்தசாமி கலா குடும்பத்தினர் (பிரான்ஸ்) அவர்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டு ஒளி வீசியது. இக் காலத்தின் கற்றல் கற்பித்தல் கண்காட்சி அனைவரது பாராட்டையும் பெற்றதுடன், இவ்வாண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி குமார். துஷாந்தினி சித்தியடைந்து பெருமை சேர்த்தார். யுனிசெவ் நிறுவனத்தால் விஞ்ஞான அறைக் கூரைத் திருத்தமும் வகுப்பறை பிரிப்பும் வர்ணப்பூச்சும் மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் சேவா மன்றத் தலைவர்களான திரு.கு.கணேசலிங்கம் (சரவணை) அவர்கள், திரு.வி.சண்முகராஜா (கனடா) அவர்களது பெருமுயற்சி காரணமாக பரிசளிப்பு நிதியம் ஒன்றை ஏற்பாடு செய்து ஞாபகார்த்த நிதியங்கள் இலங்கை வங்கி ஊர்காவற்துறையில் ஞாபகார்த்த நிதியமாக அவர்களது குடும்பத்தினரால் கீழ் வரும் பெயர்களின் நிரந்தர வைப்புச் செய்யப்பட்டது.

- அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு
- அமரர் இளையதம்பி சின்னத்துரை
- அமரர் செல்லையா சிவஞானசுந்தரம்
- அமரர் செல்லம்மா கணபதிப்பிள்ளை
- அமரர் ஞானசக்தி பாலசுப்பிரமணியம்
- அமரர் செல்லம்மா தர்மலிங்கம்

இதே ஆண்டில் மின்சாரக் கட்டணத்திற்காகவும் நிரந்தர நிதியம் வைப்புச் செய்யப் பட்டதையும் இப் பாடசாலையின் வரலாற்றுப் பதிவாகக் குறிப்பிடலாம். இந் நிதியை வைப்புச் செய்த குடும்பத்தினர்களுக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2008இல் பிள்ளைநேயப் பாடசாலைப் போட்டியில் "B" தரச் சான்றிதழ் பெற்று வலய மட்ட சாதனை படைத்து கிராமத்திற்கு பெருமை சேர்த்தது. ஞாபகார்த்த நிதி மூலம் கிடைத்த வட்டியைக் கொண்டு நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலைச் சமூகத்தின் ஆதரவுடன் இவ்வாண்டில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் க.பொ.த சாதாரண பரீட்சையிலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2009இல் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 3 கணினிகளைக் கொண்டு கணினிக் கல்வி மேலும் சிறப்புப் பெற்றது. இவ்வாண்டில் மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு கொட்டகை தற்காலிகமாக அமைக்கப்பட்டது. இவ்வாண்டின் விளையாட்டுப்போட்டியில் சிறப்பாக இடம்பெற்ற இசைவும் அசைவும் மாணவர் உடற்பயிற்சி நிகழ்வு வலயமட்டத் தெரிவாக அமையப் பெற்றது சிறப்பம்சமாகும்.

2010 நவம்பரில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவு திட்ட நிதியிலிருந்து நிழற்படப்பிரதி இயந்திரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.விநாயகமூர்த்தி அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிடைக்கப்பெற்றதன் மூலம் கிராம மக்களும் பாடசாலையும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். உலக உணவுத் திட்டத்தால் சமையல் அறை ஒன்றும், யுனிசெவ் நிறுவனத்தால் நீர்த் தாங்கி ஒன்றும் அமைக்கப்பெற்று விளையாட்டுப் போட்டி அன்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

2011இல் யுனிசெவ் நிறுவனத்தால் பிரதான மண்டப கூரைத் திருத்தமும் கிணறுகளுக்கான மூடியும் வகுப்பறைகளுக்கான வர்ணப் பூச்சும் மலசலகூடத் திருத்தமும் செய்யப்பட்டன.

2012இல் சிறுவர் நாடகமும் வலயமட்டத்திற்குத் தெரிவாகியது மாணவர் களை மேலும் இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் ஈடுபாடடையச் செய்ய வழிவகுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் கணினி அறைக்கான

சீற்றடித்து உள் பாதுகாப்பு வேலையை திரு.சோமசுந்தரம் கந்தசாமி (பிரான்ஸ்) அவர்கள் நிறைவேற்றி வழங்கியிருந்தார். களஞ்சிய அறைக்கான சீற்றடித்து உள்பாதுகாப்பு வேலையை கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 5 மாணவர்கள் 100 மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று பாராட்டையும் சான்றிதழையும் பெற்றனர்.

2013இல் யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டது. சேவா மன்றத்தால் தரம் 5 புலமைப் பரிசில் விசேட செயற்றிட்ட நிதிய நிரந்தர வைப்பு (இரண்டு லட்சம் ரூபாய்) இலங்கை வங்கி ஊர்காவற்றுறையில் வைப்பிலிட்ட பெருமையையும் பாடசாலை பெறுகின்றது. இதற்கான நிதியினை வழங்கியவர்கள்

01. பாலசுப்பிரமணியம் சிவகடாட்சம் குடும்பம்
02. சாம்பசிவம் அகிலேஸ்வரன் குடும்பம்
03. சுப்பிரமணியம் தியாகேஸ்வரன் குடும்பம்
04. திருமதி.ஜெயந்தி அகிலன் குடும்பம்

அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் நன்றியுடையவர்களாக உள்ளனர். அனைத்து நிரந்தர வைப்புக்கான நிதிய வட்டியானது யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய பரிசளிப்பு நிதிய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் காலத்தில் சேவா மன்றத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சுற்றுலா மாணவர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் நீங்கா இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. சேவா மன்றத்தினால் இவ்வாண்டில் ஒலிபெருக்கிச் சாதனம் கொள்வனவு செய்து தரப்பட்டதையும் பெருமையுடன் நினைவு கூறிக் கொள்கின்றேன்.

இவ்வாண்டில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி கண்காட்சி, உளநல செயற்பாடு, விளையாட்டுப்போட்டி பல மட்டங்களிலும் சிறப்பாகப் பேசப்பட்டது.

இவ்வாண்டில் அமுதவிழாவையொட்டி சிறப்பு மலரான **"நாகேசுவரி"** மலரினை இன்றைய தினத்தில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு பாடசாலை வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு உதவிய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கனடா சேவா மன்றத் தலைவர், உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, கல்விப்பணிப்பாளர், பணிமனை பணியாளர்கள், மற்றும் யுனிசெவ் நிறுவனத்திற்கும், வளத் தேவைகளை நிறைசெய்த பாடசாலை நலன்விரும்பிகளுக்கும் மற்றைய ஏனைய நிறுவனங்களுக்கும், மலர் வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி தந்த பெருந்தகைகளுக்கும், ஆக்கங்கள் தந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், நிதியுதவி வழங்கிய விளம்பரதாரர்களுக்கும், இந் நூலை வடிவமைத்துத் தந்த மலர் குழுவினர்க்கும், இம் மலரை அழகாக அச்சிட்டு உதவிய சிவரஞ்சனம் ஒவ்செற் நிறுவனத்தாருக்கும் இவ்விழா மேலும் சிறப்புற அனைத்து வழிகளிலும் உதவிக் கொண்டிருக்கும் சரவணை சேவா மன்றம் (கனடா) அதன் தலைவர் திரு.சி.சண்முகராஜா அவர் களுக்கும், உறுப்பினர்களுக்கும் சரவணை சேவா மன்றத் தலைவர் திரு.கு.கணேசலிங்கம் அவர்களுக்கும் மற்றும் நன்றி கூறத் தவறிய அனைவருக் கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றி கூறுவதோடு, நூற்றாண்டு விழாவை நோக்கி வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கும் நாகேஸ்வரிதாய் பல சவால்களைக் கடந்து சாதனைகள் படைக்க சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் பாதாரவிந்தங்களை வணங்கி நிறைவு செய்கிறேன்.

நன்றி.

சரவணைக் கிராமம்

******

பழமையான கிராமம் – எங்கள்
பாட்டன் பூட்டன் வாழ்ந்த கிராமம்
இளமையான கிராமம் – வீரம்
எழுந்து நிற்கும் கிராமம்.

கோயில் சூழ்ந்த கிராமம் –கல்வி
கொலுவிருக்கும் பாடசாலை
தாயைப் போல் எம்மை – என்றும்
தாங்கி நிற்கும் கிராமம்.

கலை நிறைந்த கிராமம் – நன்கு
கற்றோர் வாழும் – கிராமம்
தலை நிமிர்ந்த கிராமம் – எங்கள்
சரவணை நாகேஸ்வரியின் கிராமம்.

தேனீ போல உழைக்கும் – மக்கள்
சேர்ந்து வாழும் கிராமம்
கற்றோர் வாழ்ந்த
யாவரும் போற்றும் கிராமம்.

நல்ல தம்பி கேட்கும் – யாழ்
நாகேஸ்வரி காதில்
சொல்ல மெய் இனிக்கும் – அதை
சொலும் சுவை உண்டோ.

செல்வன் ஜெ.நிரஞ்சன்
தரம் – 06

ஆரம்பப் பிரிவு மாணவர்களும் ஆசிரியர்களும்

இடைநிலைப் பிரிவு மாணவர்களும் ஆசிரியர்களும்

சூழல் மாசடைதல்

******

இன்றைய கால கட்டத்தில் சூழல் பல வழிகளில் மாசடைகின்றது. அந்த வகையில் நாம் நோக்கும் பொழுது நம் அன்றாட வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் எமது வீட்டை நாம் துப்பரவாக முதலில் வைத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். வீட்டைக் கூட்டிக், கழுவி, தூசுகளை நீக்கிப், பாத்திரங்களை நன்றாகக் கழுவி, முற்றங்கள் வீட்டுச் சுற்றுப் புறங்களைக் கூட்டித் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். சிரட்டைகள், வெற்றுப் போத்தல்கள், பேணிகள், சொப்பின், பொலித்தீன் பைகள் என்பவற்றை எரித்தோ, புதைத்தோ விடுதல் வேண்டும்.

அத்தோடு வீட்டின் வெளிப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதேபோல் எமது கிராமத்தையும் நாம் சுத்தமாக வைத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பொது இடங்கள், சந்தைகள், பாடசாலைகள் என்பவற்றை எமது இல்லம் போல் எண்ணித் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். சிரமதான முறை மூலம் மாதத்தில் ஒருமுறை என்றாலும் எல்லோரும் ஒன்றுகூடித் துப்பரவு செய்ய வேண்டும்.

அதேபோல் வைத்தியசாலைகளையும் நாம் துப்பரவாக வைத்திருக்க ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். குப்பைகளைப் போடும் பெட்டிகளில் போடப் பழக வேண்டும். மலசலகூடங்களைத் துப்பரவாகப் பாவிக்க வேண்டும். அதே போல் வைத்தியசாலை நிர்வாகமும் வைத்தியசாலைக் கழிவுகளை புதைக்கவோ, எரிக்கவோ முயல வேண்டும். கழிவு நீர்கள் தேங்கி நிற்காமல் பார்க்க வேண்டும். அத்தோடு மலேரியா, டெங்கு, கொலரா, வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்படாத வாறு நுளம்புகளையும், இளையான்களையும் அழிக்கும் மருந்துகளை கிராமங் கள் தோறும் விசிறும் முறைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

இதேபோல் தொழிற்சாலைகளை நிறுவும்போது மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களைத் தவிர்த்தல் வேண்டும். அவற்றில் வரும் கழிவுகளைப்

பாதுகாப்பாக அகற்ற வழி வகைகளைச் செய்ய வேண்டும். அவற்றின் மூலம் வெளியேறும் புகைகளையும் பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டும்.

இவற்றைவிட விவசாயிகளும் சூழல் மாசுபடா வண்ணம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கண்ட கண்ட தேவையற்ற கிருமி நாசிகளைத் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். அத்தோடு இயற்கை உரங்களைப் பிரயோகிக்க முயற்சி செய்ய வேண்டும்.

இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு மாணவராகிய நாம் நற்பழக்க வழக்கங்களைப் பழகி எமது வீட்டையும், அயற் பிரதேசங்களையும், எமது கிராமத்தையும், எமது நாட்டையும் ஒரு நல்ல சூழல் உள்ள பிரதேசமாகக் கட்டி எழுப்ப வேண்டும் என்று எதிர்பார்த்தே இக் கட்டுரையை எழுதுகின்றேன்.

செல்வி த.பிருந்தா
தரம் - 08

அம்மா

***

அன்புள்ள அம்மாவே!
பத்து மாதம் கருவில்
சுமந்து பெற்றெடுத்து
நான் செய்த குறும்புகளை
எல்லாம் மன்னித்து
பாசத்தையும் அன்பையும்
காட்டி வளர்த்து
எம்மை பள்ளி சேர்த்து
படிக்க வைத்து
நல்ல பழக்கவழக்கங்களை
நமக்குச் சொல்லித் தந்த
அம்மாவே! உங்களை
என்றும் மறவோம்!

செல்வி த.பவுஷா
தரம் - 06

சரவணை சேவா மன்றம் - கனடா

உறுப்பினர்கள்

துணிவு இருந்தால் எதையும் வெல்லலாம்

******

ஒரு மரத்தில் இரு பறவைகள் வாழ்ந்து வந்தன. அவை முட்டை இட்டு அடை காத்து வந்தன. அந்த முட்டைகளை ஒரு நாள் காணவில்லை. அந்த முட்டைகளை யார் திருடுவது என பார்ப்பதற்காக ஆண் பறவை கருங்கல்லை எடுத்து முட்டை போன்று செய்து கூட்டினுள் வைத்தது.

மாலை நேரம் ஆகியது இரு பறவைகளும் இரை தேடப் புறப்பட்டது. அவ்வேளை பாம்பு கருங்கல் தான் இது எனத் தெரியாமல் கருங்கல்லை விழுங்கியது. உடம்பு முடியாமல் மரத்திலேயே கிடந்தது. இரை தேடச் சென்ற பறவைகள் கூட்டிற்கு வந்தன.

பாம்பு தான் தங்கள் முட்டையைத் திருடியது எனப் பறவைகளுக்குத் தெரிந்தது. ஆண் பறவை பாம்பைக் கொல்ல நினைத்தது. தனது முட்டையை பாம்பு புற்றுக்கு முன்னால் வைத்துவிட்டு மேலே பறந்து கழுகுக்கு அருகால் பறந்தது. கழுகு இந்தப் பறவையைத் தனக்கு இரையாக்க நினைத்தது. பறவைக்குப் பின்னால் பறந்து சென்றது. ஆண் பறவை பாம்பை நோக்கிப் பறந்தது. கழுகு பாம்பைக் கண்டது அதன் கூரிய நகங்களால் பாம்மைப் பிடித்தது. பறவைகள் சந்தோஷமாக இருந்தன.

செல்வி த.துளசிதா
தரம் – 10

எனது தாய் மொழி

******

தாய் மொழியே எனது உள்ளம் கவர்ந்த தாய் மொழியாகும். உலகில் வழங்கும் பல மொழிகளுள் தமிழ் மொழியே இனிமையானது. எனது தாய் தமிழ் மொழியிலேயே என்னைத் தாலாட்டி வளர்த்தாள். நான் தமிழ் மொழியில் சிந்தித்து உறவாடிப் பேசுகின்றேன். எனது மொழி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்டது.

"தமிழுக்கு அமுதென்று பெயருண்டு" என பாரதிதாசன் பாடினார். பல்வேறு நாடுகளில் தமிழ்மொழி பலராலும் விரும்பிப் பேசப்படுகின்றது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதான மொழி இல்லை" என்றார் பாரதியார். எனது மொழி தொன்மையும், பெருமையும் வாய்ந்தது. எனது தாய் மொழியை வளர்த்துப் போற்றுவது எம் முக்கிய கடமையாகும்.

செல்வி சி.டிசாந்தி
தரம் - 04

வினா மாலை

******

என்ன வேண்டும்?	நூல் வேண்டும்
என்ன நூல்?	பாட நூல்
என்ன பாடம்?	தமிழ்ப் பாடம்
என்ன தமிழ்?	பழந்தமிழ்
என்ன பழம்?	தோடம்பழம்
என்ன தோடை?	மரத்தோடை
என்ன மரம்?	புளி மரம்
என்ன புளி?	தேசிப்புளி
என்ன தேசி?	கொடித் தேசி
என்ன கொடி?	பாடசாலைக் கொடி

செல்வி சரணியா
தரம் - 03

ஆங்கில மன்றம்

கணித மன்றம்

இந்து மன்றம்

கிறீஸ்தவ மன்றம்

சிரிக்கும் பூக்கள்

******

வண்ண வண்ணப் பூக்கள் – நல்ல
அழகு நிறைந்த பூக்கள்
வானைப் பார்த்துச் சிரிக்கும் – அவை
வாசம் உள்ள பூக்கள்.

ஆடி அசையும் பூக்கள் – நான்
அருகில் சென்று பறிப்பேன்
கூடை நிறைந்து போகும் – நான்
ஆய்ந்த மலர்கள் சிரிக்கும்.

உதிக்கும் போதும் சிரிக்கும் – நான்
பறிக்கும் போதும் சிரிக்கும்
மாலை தொடுக்கும் போதும் அவை
சிரித்துக் கொண்டே இருக்கும்.

செல்வன் சு.அனோஜன்
தரம் - 04

MOTHER

******

Mother is sweet
She is kind
Mother Loves me
I Love her too
She feeds me and sews my clothes.

Mas.P.Delaxan
Grade - 04

ஞாபகமும் மறதியும் வேண்டற்பாலனவே

******

ஞாபகம், மறதி ஆகிய இரண்டும் மனிதனுக்குக் கிடைத்த நன்கொடைகள். ஆம், இவ்விரண்டும் மனித வாழ்விற்குத் தேவையானவை. மனித வாழ்வினைச் சிறப்பிப்பவை மேம்படுத்துபவை. ஆனால் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியவற்றை மறந்து விடுவதோ; மறக்க வேண்டியவற்றை ஞாபகத்தில் வைத்திருப்பதோ நல்லதல்ல. அதனால் தீமைகளே ஏற்படுகின்றன. அவ்வாறு அடிதலை மாறிச் செய்வதால், மனிதன் தன் நிலையில் தாழ்ந்து விடுகின்றான்.

ஒருவர் செய்த நன்றியை நாம் ஒருபோதும் மறத்தல் ஆகாது. நன்றியில், பெரிது, சிறிது கிடையாது. பெரிதாகச் செய்த நன்றியை நினைவில் வைத்திருப் பதும், சிறிதாகச் செய்த நன்றியை மறந்து போவதும் என்ற நிலைப்பாட்டிற்கு நன்றியைப் பொறுத்தளவில் இடம் இல்லை. நன்றியை யார் எந்த அளவில் செய்தாலும் நன்றி நன்றி தான். அதனை மறத்தல் ஆகாது.

"நன்றி மறப்பது நன்றன்று" என இடித்துரைக்கும் வள்ளுவப் பெருந்தகை, நாம் நிச்சயம் மறந்துவிட வேண்டிய ஒன்றையும் வலியுறுத்திக் கூறுகிறார். அதாவது பிறர் நமக்குச் செய்த தீமையை நாம் உடனே மறந்துவிட வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி. "**நன்றல்லது அன்றே மறப்பது நன்று**" என்கிறார் வள்ளுவர். இவ்வாறு உலகத்தில் மறக்கப்பட வேண்டியன பல உள்ளன. அவற்றை மறவாமல் உள்ளத்தில் பதுக்கி வைத்திருப்பதனால் நாமும் பிறருக்குத் தீங்கு செய்ய நேரிடுகின்றது. பழிக்குப்பழி இரத்தத்துக்கு இரத்தம் என்று பிறர் மீது பாய்வதும், பழிவாங்க முற்படுவதும் அவ்வாறு மறக்க வேண்டியவற்றை மறக்கா மல் மனத்திற்குள் புதைத்து வைத்து அவற்றை ஆராதனை செய்து வருவதால் தான் இந்த உலகில் பகைமையை விரட்டுவதற்கு ஒரே வழி, பகைமையை மறப்பதுதான். சுருங்கக்கூறின் அமைதி, சாந்தி, சமாதானம் என்பவற்றை நிலைநாட்ட வேண்டு மாயின் பகைமை உணர்வு, பழி வாங்கும் எண்ணம் அகல வேண்டும்.

கோபம் கொள்ளல், பொய் பேசுதல், களவெடுத்தல், மது அருந்துதல், பொறாமை கொள்ளல், செருக்கடைதல், இம்சித்தல், தீயோர் நட்பு, தகாத செயல்களில் ஈடுபடுதல் முதலிய மனிதாபிமானமற்ற செயல்களை மனத்தினால் கூட நினைக்க மாட்டாத அளவிற்கு மறந்து விடுதல் உலகிலே மேலான அறம் ஆகும். கவலைகள், துன்பங்கள் நிறைய உள்ளன எனக் கவலை கொள்பவர்கள், அமைதியும், நிம்மதியும் பெற வேண்டுமானால் கவலைகளை அகற்றுவதற்கு சிறந்த வழி அவற்றை மறந்து விடுவதுதான்.

மறதி, ஒரு விதத்தில் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இன்றியமையாதது தான். அந்த வகையில் மறதியும் நற்பேறே. நமக்கு ஏற்பட்ட துன்பங்களை எண்ணி எண்ணி ஏங்குவதால், நமக்கு நிம்மதிக் குறைவும் மன உளைச்சல்களுமே கிடைக்கின்றன. அவற்றை மறந்துவிட்டால் நாம் ஆரோக்கியமாக வாழ முடியும். நாம் அன்றாடம் பெற்றுக்கொள்ளும் தகவல்களில் நன்மைகள், தீமைகள், தேவையானவை, தேவையற்றவை எனப் பல வகையானவை பொதிந்துள்ளன. அவற்றுள் சாரமும் உண்டு. சக்கையும் உண்டு. அவற்றுள் முக்கியமானவற்றை நினைவில் நிறுத்தித் தீயவற்றை மறந்து விடுவதே மனிதத் தன்மையாகும். மனித முன்னேற்றத்திற்கு ஞாபகமும் தேவை மறதியும் வேண்டும் என்பதை உணர்ந்து உரிய வகையில் அவற்றைப் பயன்படுத்தி நற்பலன் பெறுவோமாக.

திருமதி. சிந்துஜா கௌரீதரன்
N.Dip.in.Teaching (Primary)

இளம் மொட்டுக்களைப் பாதுகாப்பது காலத்தின் கட்டாயம்

******

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். அரிய மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இன்று பல்வேறு துறைகளிலே வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறான். இவ்வாறாகச் சிறந்த அறிவுமிக்கதான சமுதாயத்தினைப் படைப்பதிற் பெரும் பங்கினை வகிப்பவர்கள் சிறுவர்களே! இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகளாவர். எனவே அவர்களுடைய தேவைகள், ஆசைகள், எதிர்பார்ப்புக்களை மழுங்கடியாது அவர்களின் தேவைகளை நிறைவுசெய்து அவர்கள் உரிமைகளை மதித்து நடத்தும் போதே நாளைய சந்ததி ஒளிமயமானதாக உருவாக முடியும்.

இலங்கையில் நாளாந்தம் வெளிவரும் செய்திப் பத்திரிகைகளில் சிறுவர்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள் துஷ்பிரயோகங்கள், பற்றிய செய்திகள் அடிக்கடி இடம்பெறுகின்றன. யுனிசெவ் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இலங்கைப் பிள்ளைகளுள் 14 – 16 சதவீதத்துக்கு இடைப்பட்டோர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாக அறியப்பட்டுள்ளது. எனவே பிள்ளைகளுக்கு எதிரான உடல்ரீதியான, மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகத்தின் சதவீதம் இதனைவிட உயர்வாகக் காணப்படுகின்றது. இவ்வாறான துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக ஏற்படும் உடல்ரீதியான, உளரீதியான, சமூகரீதியான தீங்குகள் அளவிட முடியாதவை.

உடல் சார்ந்த துஷ்பிரயோகமானது யாதேனும் வகையில் வலிமையான நிலையில் இருக்கும் ஒருவர் அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் (உதாரணமாக பெற்றோர், உறவினர்கள், ஆசிரியர்கள், பாதுகாவலர்கள்...) வேண்டுமென்றே பிள்ளைகளுக்கு காயம் விளைவித்தல் அல்லது காயம் விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தலே உடல் சார்ந்த துஷ்பிரயோகம் ஆகும்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது வளர்ந்தவர் ஒருவரால் அல்லது கூடிய வலிமையுடைய ஒருவரால் பிள்ளையொன்று பாலியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுதலாகும். இது தொடுகையுடனோ, தொடுகைஅற்ற

வகையிலோ நிகழ இடமுண்டு. உதாரணமாக தகாப்புணர்ச்சி, கற்பழிப்பு, விபச்சாரம், ஆபாசப் புகைப்படங்கள் என்பனவாகும். பின்வரும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் நிகழக்கூடிய ஏதுக்கள் காணப்படுகின்றன. பெற்றோர் இல்லாத பிள்ளைகள், தனித்து விடப்படும் பிள்ளைகள், தெருவோரப் பிள்ளைகள், வேலைக்கு அமர்த்தப்படும் சிறார்கள், பெற்றோர்களால் கண்காணிக்கப்படாத சிறார்கள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகத்திற்கு ஒருவரை தூண்டுதல் மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகம் எனப்படும். மனவெழுச்சி சார்ந்த துஷ்பிரயோகம் மூலம் பிள்ளையின் சுயமதிப்பு மீண்டும் மீண்டும் தாக்கப்படும். அது பிள்ளையின் சுயஉணர்வை நசுக்கிவிடக் கூடியது. மனவெழுச்சி ரீதியான துஷ்பிரயோகம் ஆனது மறுத்தல், இழிவுபடுத்துதல், தனிமைப்படுத்துதல், அச்சமூட்டுதல், கேடு செய்தல், கரிசனை காட்டாதிருத்தல், வளர்ந்தோர் போன்று நடத்துதல் போன்ற விதங்களில் நிகழுகின்றது.

ஹன்றிகெம்பு (Henrykempi) என்பவர் தவிர்க்கக்கூடிய சாதாரண விருத்திப்போக்கு, நிலைகுலைதல், சிறுவர் துஷ்பிரயோகம் எனக் கூறுகின்றார். (இங்கு சாதாரண விருத்தி என்பது உடல், உள, மனவெழுச்சிசார், நுண்மதிசார் விருத்திகள் அடங்கும்) எனவே இவற்றில் இருந்து பிள்ளைகளது பாதுகாப்பிற்காக வளர்ந்தோர் செய்யக் கூடியவை.

01. பிள்ளைகள் பாதுகாப்புப்பெற வேண்டியவர்கள் என்பதை அவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும்.
02. பிள்ளைகள் மனதுக்குத் தொல்லை தரும் விடயங்கள் தொடர்பாக பிள்ளைகள் உங்களுடன் கதைக்கும் போது அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தல்.
03. அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத்தக்க விதம் தொடர்பாக ஏனைய வளர்ந்தோருடன் உரையாடுங்கள்.
04. பாதுகாப்பாக நடந்துகொள்ளும் விதத்தை உங்களது வாழ்க்கையூடாகப் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டுங்கள்.

05. பிள்ளைகளுக்கு அவர்களது சொந்தப் பாதுகாப்புத் தொடர்பாக கற்பியுங்கள். எவரேனுமொருவர் பிள்ளையொன்றுக்குத் தொல்லை கொடுக்கவோ, அப்பிள்ளையைத் தவறான வகையில் தொடவோ முயற்சி செய்வாராயின் செய்ய வேண்டியவற்றைப் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள்.

- ✧ வேண்டாம் எனச் சொல்லுங்கள்.
- ✧ உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரிடம் சொல்லுங்கள்.
- ✧ எவரேனும் ஒருவர் உதவி செய்யும் வரை அது குறித்து தொடர்ந்து சொல்லிக்
- ✧ கொண்டேயிருங்கள் என அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

நாட்டின் எதிர்காலத்தை ஏற்றுக்கொள்ளவிருக்கும் சிறுவர் சந்ததியை இவ்வாறான தீங்கான நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளாவிட்டால் எமது நாட்டின் எதிர்காலம் இருளடைய இடமுண்டு. சிறுவர்கள் வயதில் குறைந்தவர்கள், மென்மையானவர்கள், களங்கமற்றவர்கள் எனவே அந்த மென்மையான மனதினை உடைய மலர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோருக்கும் சமூகத்தில் அதிகாரத்தில் உடையோருக்கும் உரியதே ஆகும்.

திருமதி.றொக்ஷினி அருள்ஞானரட்ணம்
N.Dip.in Teaching (Merit),
B.A

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலை அபிவிருத்திக் குழு

ஞாபகார்த்த தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்களில் சிலர்

ப.பானுமதி

அ.சுரேக்கா

வே.சஜீபா

த.இந்துஷா

ப.மயூரி

வேண்டுவது ஓர் இலட்சியம்

******

மனித வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது மனிதன் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு போகும் நிலையைக் காணலாம். தற்போது நவீன தொழில் நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். விஞ்ஞான முன்னேற்றங்கள் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்கள் என்பவற்றோடு சமூகத்தில் தொழில்நுட்ப மாற்றங்களும் ஏற்படுகின்றன. இக்காலத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் பல பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அதனால் பெறப்படுகின்ற வெளியீடுகளும் நாம் பயன்படுத்தும் தன்மைக்கேற்ப நன்மையானதாகவோ, தீமையானதாகவோ அமைந்து விடுகின்றன.

புதிய யுகத்தில் வாழும்போது இலட்சியம் நோக்கிச் செல்வதற்குப் பல கவனக்கலைப்பான்கள் எம்முன்னே வந்து முட்டி மோதுகின்றன. இவை எமது இலக்கைத் தடைப்படுத்தலாம். இவற்றுக்கு எதிர் நீச்சல் போடுபவனே உன்னத நிலையை அடைவான். இலட்சியம் என்பது ஒருவன் அடைய வேண்டிய உயர்ந்த இடமாகும். இது ஒருவனுடைய வாழ்வின் உயர்ந்த குறிக்கோளாகும். எவராக இருந்தாலும் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு இலட்சியம் ஒன்றினைக் கொண்டிருப் பது சிறப்பானதாகும். இலக்கில்லையெனின் முயற்சிகள் மழுங்கடிக்கப்படும். புகையிரதமானது சரியான புகையிரப் பாதையூடாகச் சென்றால்தான் செல்ல வேண்டிய உரிய இடத்தினை அறிந்து அடைய முடியும். அவ்வாறே ஒருவர் இலட்சியம் ஒன்றினை தன்னுள் உறுதிப்படுத்திக் கொண்டால் தான் அவற்றை நோக்கி நகர முடியும்.

இலட்சியம் இல்லாது வாழ்தல் கூடாது. அவ்வாறு இருப்பது எங்கு செல்கின்றோம் என்று அறியாது பிரயாணம் செய்வதற்கு ஒப்பானதாகும். மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தோமஸ்அல்வாஎடிசன். அவருக்குத்தான் ஒரு கண்டுபிடிப்பாளராக வரவேண்டும் என்பதே இலட்சியமாக இருந்தது. அதற்காக வாழ்வில் பல சவால்களையும், தோல்விகளையும் சந்தித்தபோதும் தனது செயலில் கொண்ட விடாமுயற்சியினால் உலகில் தலைசிறந்த கண்டு பிடிப்பாளராகப் புகழ்பெற்றார்.

இலட்சியம் ஒன்றினை தேர்வு செய்தால் மட்டும் போதுமானதன்று. அவற்றினை நோக்கிய நகர்வு தொடராக இருக்க வேண்டும். "என்னால் முடியும்", "நான் வெற்றி பெறுவேன்" போன்ற சிறந்த சிந்தனைகள் மனதில் எப்பொழுதும் இருத்தல் சிறப்பானது. இலக்கினைத் தடைப்படுத்த சமூக, பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப ரீதியாகப் பல்வேறு காரணிகள் ஆதிக்கம் செய்யலாம். அவற்றிற்கு முகங்கொடுத்து வெற்றி பெறவேண்டும். சிலரிடம், உம்முடைய இலட்சியம் என்ன? என்று கேட்டால் ஆசிரியராக, விஞ்ஞானியாக, மருத்துவராக, பொறியியலாள ராக வரவேண்டும் என்று கூறுவதைப் பார்த்திருக்கின்றோம். அதே நேரம் அவர் களில் பெரும்பாலனவர்களிடம் அவற்றுக்கான சிறுமுயற்சிகளைக் கூட அவதானிப்பது முடியாது. அதேநேரம் ஒரு சிலர் மௌனமாக இருப்பதனூடாக எவ்வித இலட்சியமும் இல்லாமல் இருப்பதையும் உணர முடிகின்றது.

ஒருவர் தனது விருப்பு, ஆற்றல் ஏற்பவற்றுக்கேற்ப சிறந்த இலட்சியம் ஒன்றைத் தெரிவுசெய்து கொள்ள முடியும். போகின்ற பாதை சரியா என அடிக்கடி பார்த்து ஒழுங்குபடுத்த வேண்டும். அப்பர் சுவாமிகள் **"குறிக்கோள் இலாது கெட்டேன்"** என முதுமையில் கழிவிரக்கப்படுகின்றார் இது எமக்கோர் பாட மாகும். இளம்பருவத்திலேயே **"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணவும் என்பது இழுக்கு"** என்பதற்கிணங்க எமக்குகந்த இலட்சியம் ஒன்றை மனங்கொண்டு அதனை அடைவதற்குரிய பாதையில் நல்ல வழிகாட்டல், நம்பிக்கை, விடாமுயற்சி என்பவற்றோடு பயணத்தினைத் தொடர வேண்டும். இது மட்டும் நடந்துவிட்டால் வெற்றி நிச்சயம்.....!

திரு.ச.சபாகரன் (ஆசிரியர்)
B.A (Hons), PGDE

எனது எதிர்கால இலட்சியம்

******

ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஓர் எதிர்கால இலட்சியத்தைக் கொண்டிருப்பான். அதற்குரிய பாதையில் தனது பயணத்தை மேற்கொள்வான். விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றுடன் இலட்சியத்தை நோக்கிப் பயணிப்பான். அந்த வகையில் உலகில் காணப்படும் பல்வேறு வகையான சேவைகளில் மகோன்னதமான தாதிச் சேவையில் ஈடுபடுவதே என் இலட்சியமாகும். நோய், இயலாமை முதலியவற்றால் துன்புற்று வாடும் மக்களுக்கு உறுதுணையாக இருந்து சொல்லாலும் செயலாலும் அரவணைக்கும் சேவையாகிய தாதிச் சேவையையே நான் மிகவும் நேசிக்கிறேன்.

கடவுளுக்கு நிகரான வைத்தியர்களுக்கு அடுத்தபடியாகத் தாதியர்களே காணப்படுகின்றனர். உடலால், உள்ளத்தால் பலவித நோய்களுக்கு ஆட்பட்டு அந்தரிக்கும் நோயளர்களை அன்புடனும், பொறுமையுடனும் அணுகி அவர்களது துன்பங்களைப் போக்குவது தாதியரின் கடமையாகும்.

தியாக உணர்வு, மனவலிமை மற்றும் சகிப்புத் தன்மையுடன் சிறந்த பண்பாளர்களாகச் சுற்றிச் சுற்றி வந்து சேவை செய்யும் திறன் தனித்துவமானது. அணிகின்ற வெள்ளை ஆடை போல உடற்சுத்தம், உளச்சுத்தம் கொண்டு கம்பீரமாய்ச் சேவை செய்யும் தாதிச் சேவையை நான் மிகவும் விரும்புகிறேன். தாதிய சேவையை ஆரம்பித்து வைத்த நைற்றிங்கேல் அம்மையாரின் கனவுகளை நனவாக்கும் விதத்தில் ஒரு நல்ல தாதிய உத்தியோகத்தராக வரவேண்டும் என்ற எண்ணத்தில் என் பயணத்தைத் தொடர்வேன்.

செல்வி ப.மதுஷா
தரம் - 05

கல்வியைத் தேடு

******

அறியாமை இருள் நீக்கி
ஒளியேற்றும் கல்வி
நெறியோடு புவியோரை
நிலை செய்யும் கல்வி
தெரியாத பலவற்றை
தெளிவாக்கும் கல்வி
தேசங்கள் சென்றாலும்
சிறப்பேற்கும் கல்வி

வாழ்வென்றால் எது வென்று
வரை செய்து கூறும்
வறியோராய் இருந்தாலும்
வளம் நெஞ்சில் கூட்டும்
தாழ்வென்று வந்தாலும்
தளராது நின்று
துணிவொன்றிப் போராட
திடம் செய்யும் கல்வி

அஞ்சாமை நெஞ்சத்தை
அளித்தூறும் கல்வி
அழியாத ஆத்மாவை
அரணாக்கும் கல்வி
நெஞ்சார இன்பத்தை
நிறைவாக்கும் கல்வி
நேருக்கு நேர் பார்க்க
உரம் போடும் கல்வி

பொன்தேடி பொருள் தேடி
புவியெங்கும் செல்வார்
புகழ் தேடி புகழ் தேடி
பல கோடி சேர்ப்பார்
மண் தேடி மனை தேடி
மகிழ்வெய்தப் பார்ப்பார்
மாறாத இன்பங்கள்
எதுவென்று கேட்பார்.

விண் தேடிப் போனாலும்
விளைகின்ற இன்பம்
வீணாகிப் போமையா
அது வென்றும் துன்பம்
கண் போன்ற கல்விக்கு
கரையில்லை கண்டீர்
கருத்தோடு அதைத் தேடு
மாறாத இன்பம்.

திருமதி.ஸர்மினி கணேஸ்வரன்
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)
B.A, PGDE

காயத்திரி மந்திரத்தின் சக்தியும் பலனும்

******

ஓம் பூர் புவ ஸ்வஹா
தத் ஸதுவிர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
த்யோ யோந ப்ரசோதயாத்

கற்றோரின் மத்தியில் பிரணவ மந்திரத்தையும் காயத்திரி மந்திரத்தையும் தம் ஆன்மீக வழிபாட்டிற்கு உதவியாக யார் யார் ஓதலாம், உச்சரிக்கலாம், யார் ஓதக் கூடாது என்ற கருத்து வேறுபாடு தோன்றி உள்ளது. அது தவறு கீதையில் கிருஷ்ணபகவான் இம்மந்திரத்தை ஒரு பகுதியினரோ அல்லது ஒரு பாலினருக்கோ என்று மட்டுப்படுத்தவில்லை. எவரும் உச்சரிக்கலாம் என்கிறார்.

ஓம் அல்லது பிரணவ சப்தத்தின் விரிவே இம் மந்திரம். இன்று வணக்கத் திற்கும் மதிப்பிற்கும் உரியதாகக் கருதப்படுகின்றது. ஆத்மீக வாழ்வின் ஆரம்ப மாக காயத்திரி மந்திரத் தியானம் அமைகின்றது.

ஓம்	–	பரப்பிரம்மம்
பூர்	–	பூலோகம்
புவ	–	புவர்லோகம்
ஸ்வா	–	சுவர்க்கலோகம்
தத்	–	பரமாத்மா
ஸவிதுர்	–	எல்லாத் தோற்றங்களையும் தோற்றுவித்தது
வரேண்யம்	–	வழிபடுவதற்குரிய வஸ்து
பர்கோ	–	ஆன்மீக ஒளி
தேவஸ்ய	–	தெய்வீக உண்மையாக விளங்குகின்ற
தீமஹி	–	நாம் தியானிப்போமாக
தியோ	–	புத்தி
யோ	–	எது
ந	–	எங்களது
பிரசோதயாத்	–	பிரகாசிக்கச் செய்வாயாக



உளநல மன்றம்



உளசமூக இடையீட்டு ஆற்றுகையின் போது



மாணவர் மன்றம்

ஆரம்ப கல்வி மன்றம்

ஓம் மாதா! முக்காலம் மூவுலகிலும் உறைபவளே! எனது புத்தியைக் கூர்மை அடையச் செய்து சூர்யப்பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல எனது சகல அறியாமையையும் அகற்றி புத்தியை பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கின்றேன்.

காயத்திரி மந்திரம் விஸ்வாமித்திர முனிவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆதியான வேதங்களில் காணப்படுகின்றது. வேதங்களின் மாதா காயத்திரி இம் மந்திரம் எங்கு ஓதப்படுகின்றதோ அங்கு காயத்திரி பிரசன்னமாகி மீட்சி அளிப்பாள்.

இம் மந்திரம் மனிதனின் மனத்திறனை வளர்க்கவும் கூர்மையான அறிவைப் பெறவும் உதவுகிறது. ஒழுங்காகவும் முறையாகவும் ஓதுபவருக்கு நோய்கள் தீரும், துக்கம், துன்பம் நீங்கும், சகல விருப்புக்களையும் நிறைவேற்றும். எந்த நேரமும் எல்லாவிடங்களிலும் சொல்வதற்கு உகந்தது. சிறுபிள்ளைகள் இம் மந்திரத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதும் நற்பண்பினால் அருமையான புத்தியினைப் பெற்று அவர்கள் தலைவிதியை தலைமை வகிக்கும் செல்வத்தைப் பெற்று நாட்டின் முன்மாதிரியான பிரசைகளாவார். எதிர்காலம் அவர்கள் கைகளில் பாதுகாப்பாக இருக்கும்.

நன்றி

திருமதி.கேமலதா கண்ணதாசன்
இசை ஆசிரியர்

சுயஆய்வு கொள்வோம்

******

சுயஆய்வு என்பது அமைதியான சூழ்நிலையில் தனிமையில் தனிப்பட்ட தீர்மானத்துடன் ஒருவரால் செய்யப்படவேண்டிய செயல்முறை. இதன்மூலம் ஒருவர் தன்னுடைய வாழ்க்கை முறையை, உணர்ச்சிகளை, நடத்தைகளை, நிறைகுறைகளை அலசி ஆராய்ந்து தனது உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளலாம். இது ஒருவரது வளர்ச்சிக்குத் துணை செய்யும். ஆனால் சுயஆய்வு நம் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுவது மிகக் குறைவு. எனவே, சுய ஆய்வுக்கான சந்தர்ப்பங்களும் வழிநடத்தல்களும் வழங்கப்பட வேண்டும். அதன் அவசியம் உணர்த்தப்பட பாடசாலை, சமூக, சமய மட்டத்தில் விழிப்புணர்வு கொண்டுவரப்படுதல் வேண்டும்.

சுயஆய்வு தனிமனித வளர்ச்சிக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கின்றது. ஒருவன் தன்னை அறிந்து கொண்டால் மற்றவர்களை ஏற்றுக் கொள்வது சுலபம் என சில உலவியலாளர்கள் கூறுவார்கள். ஒருவன் தன்னை முழுமையாக அறிய வேண்டும். அந்த அறிவே சுயஆய்வின் வெளிப்பாடு எனலாம். ஒருவர் ஏனோ தானோ என்ற மனநிலையில் ஏன்தான் கடவுள் இப்படிக் குறைபாடு களைத் தந்திருக்கிறார் என்ற அங்கலாய்ப்பில், தன் குறைநிறைகளை ஏற்றுக் கொள்ளும் போது அவனால் சந்தோஷமாக வாழ முடியாது. ஆனால் ஒருவர் தனது குறைநிறைகளை நேர்த்தியான மனநிலையில் ஏற்றுக்கொள்ளும் போது மகிழ்ச்சியாக வாழ்வார். அத்தோடு தமது குறைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் மூலம் மேலும் மேலும் வளருவார்.

சுயஆய்வுக்குத் தன்னை உட்படுத்தும் ஒருவனின் செயற்பாடுகள் அவனது வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும். சுயஆய்வைத் தொடர்ச்சியாகச் செய்வார் கள். தங்கள் வளர்ச்சியிலும் நடத்தையிலும் முதிர்ச்சியைக் காண்பார்கள். இவர்கள் தங்களது உணர்வுகளைத் தனக்கும் மற்றவர்களுக்கும் பாதிக்காத வகையில் நெறிப்படுத்துவர்; என்றும் மகிழ்ச்சியாக இருப்பர். தமது குறைகள் சுட்டிக் காட்டப்படும் போது மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வர். சமூகத்தில் உறவு களை வலுப்படுத்தி நல்ல நண்பர்களைக் கொண்டிருப்பர். எரிச்சல், பொறாமை, போட்டி, ஊழல் போன்ற பண்புகளில் இருந்து விலகி எல்லோரையும் அன்பு செய்யும் மனிதர்களாக விளங்குவர்.

உண்மையான சுயஆய்வு செய்து நம்மை நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளவோமேயானால் கீழ் குறிப்பிடப்படும் அறிகுறிகளைக் காணமுடியும் என பேராசிரியர் ஜோன்பவல் கூறுகின்றார்.

அதாவது தங்களை ஏற்றுக் கொள்பவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாகக் காணப்படுவார்கள். மற்றவர்கள் தங்களைக் குறை கூறினாலும் அன்பு செய்யா விட்டாலும் கோபப்படாமல் அவர்கள் தங்களை விளங்கிக் கொள்ளவில்லை எனக் கருதுவார். அத்தோடு இலகுவாக மற்றவர்களை நாடிச் செல்வார்கள். அந்நிய ரோடு பழகவும், உறவாடவும் பின் நிற்கமாட்டார்கள். மேலும் மற்றவர்களால் அன்பு செய்யப்பட ஆவலாய் இருப்பார்கள்.

திறந்த மனங்கொண்டவராய் இருப்பதுடன் மற்றவர்கள் தங்களைப் புகழும் போது சந்தேகக் கண்கொண்டு பார்க்கமாட்டார்கள். அதேவேளை தங்களை ஏற்றுக்கொள்வோர் இதுவே உண்மையான நாள் என்பது கூறும் அளவிற்கு உறுதி பூண்டவர்கள். மற்றவர்களால் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டாலும் அதைப் பெரிதுபடுத்திக் கொள்ளமாட்டார்கள். இவர்கள் தங்களுடைய தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்யும் ஆற்றல் உள்ளவர்களாய் மற்றவர்களின் தேவைகளில் உன்னிப்போடு குறியாய் இருப்பர்.

தங்களை ஏற்றுக்கொள்வோர் வீண் கற்பனை உலகில் வாழாது உண்மை நிறைவுடன் தொடர்புடையவர்களாய் தங்கள் வரையறைகளை நன்கு அறிந்தவர்களாய் வாழ்வார்கள்.

மனித வாழ்வில் சுயஆய்வைப் பாதிக்கும் தடைகளாக அமையும் காரணிகளை எடுத்து நோக்கினால் பொதுவாக சுயஆய்வைத் தடுக்கும் பிரதான காரணியாக ஒருவர் தனக்குத்தானே தடையாக இருக்கலாம். அதாவது ஒருவர் சுயமாக தானே தன்னைப் பற்றி அறிய விரும்பாத நிலையில் தன்னை அறியக் கூடிய வழிவகைகளைப் பின்பற்ற விரும்பாத நிலையில் அவர் தானே தனக்குத் தடையாக இருக்கின்றார். அதேவேளை ஒருவர் தான் செய்வதெல்லாம் சரி ஒரு குறையுமே இல்லை என்று சிந்திப்பாராயினும் அவரால் சுயஆய்வை மேற்கொள்ள முடியாது.

சுயஆய்வில் எம்மை முழுமையாக ஏற்றுக்கொள்ள பல்வேறு தடைகள் நமக்கு ஏற்படுகின்றன. ஒவ்வொருவரின் தனித்துவத்திற்கேற்ப எக் காரணி மேலோங்கி நின்று ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை நாமே கண்டுகொள்ள வேண்டும்.

- ✧ எனது உடல் தோற்றம், கட்டமைப்பு
- ✧ எனது மனம்
- ✧ எனது தவறுகள்
- ✧ எனது உறவுகள்
- ✧ எனது ஆளுமை

நாம் அனைவரும் எமது உடல் தோற்றத்தில் ஏதோ ஒரு மாற்றத்தை விரும்புவர்களாய் இருக்கலாம். தன்னைப்பற்றி ஒருவன் மதிப்பாய் எண்ணுவதற்கு அல்லது சுயகௌரவத்திற்கு உடல் தோற்றம் மிக முக்கியமானது என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, இந்த உடல் குறைபாடுகள் எப்படியான ஒரு தாக்கத்தை நம்முன் உண்டுபண்ணுகின்றன என்பதை அறிய முயல வேண்டும்.

எந்த பாடசாலையிலும் வேலைத் தலத்திலும் புத்திக்கூர்மைக்கு அழுத்தமும் முக்கியத்துவமும் கொடுக்கப்படுகின்றது. எங்கள் உறவுகளிலும் புத்திக்கூர்மை, போட்டி, மனப்பான்மையை உண்டு பண்ணலாம். மற்றவர்களுடைய சிரிப்புக் குரிய, நாணி வெட்கப்பட வைத்த சந்தர்ப்பங்கள் மனதில் ஆறாப்புண்ணை பதித்திருக்கலாம். இருப்பினும் இதுவே எனக்கு அளிக்கப்பட்ட அறிவும் தரமும் என்ற மனநிறைவோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக சுயஆய்வைப் பற்றி உளவியலாளர்கள் அறிவுரீதியாக விமர்ச்சித்துள்ளன. ஒரு மனிதன் சமூகத்தில் நிறைவாக வாழ வேண்டுமாயின் இக்கால ஆய்வானது வாழ்வோடு இணைந்திருத்தல் வேண்டும். சுயஆய்வின் முக்கியத்துவம் உணர்ந்து செயற்பட்டால் ஒரு மனிதன் நிறைவான வாழ்வை வாழலாம்.

திரு.த.கபிலநாதன்
ஆசிரியர்

அன்புத் தம்பி ராம்

******

அன்புத் தம்பி ராம்,

நீங்கள் நலமாக இருப்பதில் எங்கள் நலம் தங்கியுள்ளது...!

எங்கள் ஊர்ப் பாடசாலையில் இதுவரையும் கற்று இன்று இரண்டாம் நிலைக் கல்விக்காய் எமைப் பிரித்து பட்டணம் சென்றிருக்கிறீர்கள்! ஒரு புறம் மன மகிழ்ச்சி, மறுபுறம் நெருடல்! பட்டணத்துக் கலாசாரம் என்பது பல பெரியவர்களும் புறம் சொல்லும் பண்பாடு. நீங்கள் சிரத்தையாய் இருக்க வேண்டும் என்பதுவே எம் விருப்பம்.

மாணவனாய் இருக்கும் உங்களுக்கு இப்போது கைமணிக்கூடு அவசிய மில்லை. உங்கள் அறிவும், ஆற்றலும், உங்கள் நடத்தை, திறன்களிலேயே தங்கி யுள்ளது. எனவே மணிக்கூடு போன்ற சில்லறை ஆடம்பரத்திற்குப் பணத்தைச் சிதற விட வேண்டாம். உங்கள் இருப்பிடம், பாடசாலை என்பவற்றில் நேரம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும். நீங்கள் சுவர் மணிக்கூட்டைப் பின் பற்றினாலே போதும்.

வாரம் ஒருமுறை அல்லது இரு வாரத்திற்கு ஒருமுறை நாம் சந்திக்கப் போகிறோம். எனவே கைத்தொலைபேசியோ, வேறு தொடர்பாடலோ அவசிய மன்று. இவை கற்கை மீதான உங்கள் ஆவலைக் குன்றச் செய்யும். நீங்கள் சேர்ந்திருப்பது பட்டணத்துப் பாடசாலை. மாணவர்கள் பலவிடங்களில் இருந்து பலவாறாக வருவார்கள். அவர்களைப் பார்த்து திகைப்படையத் தேவையில்லை. நீங்கள் உங்கள் சுயத்தைக் காப்பாற்றிக் கொண்டால் போதும். உவ்விடம் மாணவர்கள் பண்பாடும் மிக மோசம். நீங்கள் கிராமத்தில் இருந்து பட்டணம் சென்ற மாணவன். எனவே பண்பாடுதான் உங்கள் பெருமை என்பதை மறந்து விட வேண்டாம். மேற்சட்டை உள்ளே விடுவது சிலபேருக்கு வேடிக்கை. ஆனாலும் நீங்கள் மாணவர் என்பதால் மேற்சட்டை (சேட்) உள்ளே விட்டு நீலக் காற்சட்டையை இடுப்பில் சரியாக அணிதல் அத்தியாவசியமானது. கழன்று விடுவது போல் காற்சட்டை போடும் கலாசாரத்திற்கு அடிமையாகிவிடாதீர்கள். பாடசாலை என்பது கோயிலுக்குச் சமன். எனவே கழுத்துமுட்ட பொத்தான் பூட்டி,

கழுத்துப்பட்டியைக் கட்டவும். பாடசாலைக் கழுத்துப்பட்டிக்குத் தனிமதிப்பு உண்டு என்பதைப் பேணுவது தங்கள் தலையாய கடன்!

உரிய காலத்தில் தலைமுடி வெட்டி, முகச்சவரம் செய்து கொள்ள வேண்டும். கண்டபடி தலைமுடி வெட்டிக் காட்டுமிராண்டியாய்க் காட்டிவிடக் கூடாது. மிகக் கவனம்! நகம் வெட்டி நாகரிகமாக இருக்க வேண்டும். உணவு உண்ணும் போதும் உரையாடும் போதும் பண்பாடு இருக்க வேண்டும். உங்கள் ஒவ்வோர் அசைவிலும் உங்களை உலகம் கணக்கிடும்! கவனம்!.

அன்புத் தம்பி, ஆசிரியர்கள், கடவுளர்க்குச் சமன். பட்டணத்துப் பெடியன்கள் பலபேராய்ச் சேர்ந்து உங்கள் ஆசிரியர்களுக்கே பட்டமளிப்பு விழா வைப்பார்கள். அது பெரும் அசிங்கம். நீங்கள் படிக்கத்தான் போயிருக்கிறீர்கள் மறந்து விட வேண்டாம். தனியிடம்தானே யாருக்குத் தெரியுமென்று ஏழு மணி வரை எழுந்திராமல் புரள்வது அழகல்ல. ஐந்தரை மணிக்கு ஆலயம் செல்லும் அழகிய பண்பாட்டைத் தொடர வேண்டும். மரக்கறி உணவு, மகத்தான பண்பாடு எங்கள் குடும்பப் பெருமை.

மாற்றம் கால நியதிதான். அதற்காகத் தலைகீழாக நிற்பது மாற்றமில்லை. அது துர்நாற்றம். நீங்கள் அணியும் ஆடைகள் மானம் காப்பதற்கே. அணிவதனால் மானத்தைக் காக்கும் பழக்கத்தை மாற்றி "அரைகுறையாய்" மானத்தைக் போக்கி விடாதீர். உங்கள் ஆடைகள், உங்கள் சூழல் என்றும் தூய்மையாக இருக்கட்டும். சூரிய ஒளியும் காற்றும் தாரளமாக உங்களுடன் சகவாசம் கொள்ள வேண்டும். தேவைக்கு மட்டும் செலவு என்ற தாரக மந்திரத்தை மறந்துவிட வேண்டாம். தேவையற்ற வாசனைத் திரவியம் வீண் பொருள் விரயம். கல்வியே கருத்தனம் என்பதை என்றும் நினைவில் கொள்க. எங்கள் உறவுகள், சுற்றங்கள் ஆவலுடன் பெருத்த எதிர்பார்ப்புடன் துல்லியமாக உங்களை அவதானித்த வண்ணம் இருக்கிறார்கள். தெய்வம் நமக்குத் துணை தம்பி! துணிவாக உம் பயணத்தைத் தொடர்வீராக! அன்பும் அறனும் துணைக் கொள்வாயாக. விரைவில் நேரில் சந்திப்போம்.

இங்ஙனம்,
என்றும் அன்புடன் அண்ணா,
திரு.கு.பாலஷண்முகன்
B.A.(Hons), PGDE, M.A.

நிகழ்வின் நிழல்கள்





தண்ணீர்த் தாங்கி திறப்பு விழாவின் போது

போட்டோப்பிரதி இயந்திரம்
DCP நிதியம் மூலம்
வழங்கப்பட்ட போது



யுனிசெப் நிறுவனத்தால்
ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு
விளையாட்டு உபகரணங்கள்
வழங்கப்பட்ட போது

நிகழ்வின் நிழல்கள்

பொங்கல் விழாவின் போது

சரஸ்வதி பூஜையின் போது

ஏடு தொடக்குதலின் போது

ஒளி விழாவின் போது

நாம் சென்ற கல்விச் சுற்றுலா

******

யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய இடைநிலைப்பிரிவு மாணவர் களாகிய நாங்களும் எமக்குக் கற்பித்த ஆசிரியர்களும், வலயக்கல்வி அதிகாரிகள் சிலரும் எமது தீவகக் கல்வி வலயப் பணிப்பாளரினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விச் சுற்றுலா செல்வதற்கான அனுமதியைப் பெற்றோம். 21.12.2011 அன்று எமது கல்விச் சுற்றுலா ஆரம்பிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தினத்தன்று (21.12.2011) நான் எனது சிறிய தந்தையுடன் அதிகாலை 6.00 மணியளவில் சுற்றுலாவிற்கான சகல ஆயத்தங்களுடனும் பாடசாலையைச் சென்றடைந்தேன். என் சக மாணவர்களும் வந்து சேர்ந்தனர். காலை 6.30 மணியளவில் எமது சுற்றுலாப் பயணம் எமது பாடசாலையில் இருந்து ஆரம்ப மானது.

சுற்றுலாவின் ஆரம்பகட்டமாக நாம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குச் சென்றடைந்து அங்கிருந்து A,B,C,D,E என ஐந்து பிரிவுகளாக பேரூந்துகளில் ஏறி A9 பாதையின் ஊடாக எமது பயணத்தை ஆரம்பித்தோம்.

சுற்றுலாவின் ஆரம்பகட்டமாக ஆனையிறவுக்கு வந்து அங்கு சில நிமிடங்கள் உப்பு உற்பத்தி செய்யும் இடங்களைப் பார்வையிட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். பரந்தன், வவுனியா ஆகிய இடங்களைக் கடந்து சென்றபோது போராட்டத்தின் போது ஏற்பட்ட பேரழிவுகளையும் கண்டோம்.

அதன்பின் பயணம் அனுராபுரம் நோக்கி ஆரம்பித்தது. அங்கே முதலில் ரூவான்வெலிசாய புத்த விகாரைக்குச் சென்றோம். அக் கோபுரத்தின் பிரமாண்ட மான அமைப்பு எம்மை வியக்க வைத்தது. மேலும் தங்கவேலி அமைக்கப்பட்ட புனித வெள்ளரசு மரம், ஆயிரம்கால் மண்டபம் என்பவற்றைப் பார்வையிட்டோம். அதன்பின் எங்களுக்கு என்று ஏற்பாடு செய்யப்பட்ட தங்குமிடத்தில் அன்றைய இரவைக் கழித்தோம்.

மறுநாள் காலை உணவை முடித்துக் கொண்டு பம்பலப்பிட்டியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது விமானம் தரையிறங்கும் காட்சியையும், குதிரை மேல் பொலிசார் சவாரி செய்யும் காட்சியையும், கலையரங்கக் காட்சி காணக் கூடியதாக இருந்தது. அதன்பின் ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றடைந்தோம். அங்கே வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்றடைந்தோம். அங்கே வானிலைக் குறியீடுகளையும், அமுக்கமானியின் முக்கியத்துவம் பற்றியும், மழை வீழ்ச்சியை அளவிடும் கருவியின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தையும் அங்குள்ளவர்கள் விளக்கமளித்தனர். அது எமக்கு மிவும் பயன்மிக்கதாகக் காணப்பட்டது.

அடுத்து கொழும்பில் உள்ள கோளரங்கத்திற்குச் சென்றோம். அங்கே வெள்ளுடுத்தொகுதி, நுண்கோள்கள், இராசிகள், சூரியன் புவிக்கு அண்மையில் உச்சங் கொடுத்தமை என்பவற்றை எம்மால் பார்க்க முடிந்தது. ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள், கோளம், போலிகள், புவி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருதல் என்பவற்றையும் கண்டோம்.

பின் தெகிவளையில் உள்ள மிருகக் காட்சி சாலையினுள் சென்ற நாங்கள் முதலில் கடற்பசுவையும் திருக்கை மீனையும் பார்வையிட்டோம். பின் பல வர்ண மீன் இனங்கள், பஞ்சவர்ணக் கிளிகள், கொரில்லாக் குரங்குகள், சிம்பன்சி குரங்குகள், பன்றி, நீர்யானை, மான், யானைகள், எலிகள், முயல்களையும், ஒட்டகம், ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை, வெள்ளைக் காகம், காட்டுச் சேவல், ஆமைகள், பாம்புகள், சிங்கம், புலி, கரடி, வெள்ளைப்புலி என்பவற்றையும் பார்வையிட்டோம். இவற்றிலே வெள்ளைக் காகம், வெள்ளைப் புலி என்பன எம்மை வியப்படைய வைத்தன. அத்துடன் இரண்டாம் நாள் சுற்றுலா நிறைவு பெற்றது.

எமது சுற்றுலாவின் இறுதி நாளான 23.10.2011ஆம் திகதி அன்று காலை உணவை முடித்துக் கொண்டு நாம் கொழும்பில் அமைந்துள்ள அரும்பெரும் காட்சியகத்தை அடைந்தோம். அங்கே பழமையை எடுத்தியம்பும் கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், சிலைகள் என்பவற்றைக் கண்டு கழித்தோம். மேலும்

நிகழ்வின் நிழல்கள்

கல்விச் சுற்றுலாவின் போது

ஆசிரியர் தின விழாவின் போது

கால்கோள் விழாவின் போது

சிறுவர் நாடகத்தின் போது

விளையாட்டு நிகழ்வின் போது





போதனை செய்யும் புத்தர் சிலை, சுவரோவியங்கள், அலங்கார கலைச் சிற்பங்கள், பொலநறுவை சேது நாணயம் என்பவற்றையும் பார்வையிட்டோம்.

அடுத்து கொழும்பில் அமைந்துள்ள தேசிய நூதனசாலைக்குச் சென்ற டைந்தோம். அங்கே கல்வெட்டுக்கள், கைப்பணிப் பொருட்கள், ஓவியங்கள், புடைவைகள், மட்பாண்டங்கள், நாணயங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துக்கள் ஆகிய காட்சிப் பொருட்களைக் கண்டோம். இவற்றைத் தவிர இனிப்புப் பண்டம் செய்யும் இயந்திரம், பழச்சாறு செய்யும் இயந்திரம் என்பவற்றையும் நேரடியாகப் பார்த்து அதன் செயற்பாடுகளையும் அதனை இயக்கும் முறைகளையும் கற்றுக் கொண்டோம். அதன் இன்னுமொரு பகுதியாகக் காணப்பட்ட நூலகத்திலே ஏராளமான ஆங்கில நூல்கள் காணப்பட்டன. அங்கு தமிழில் மொழி பெயர்க்கப் பட்ட நூல்கள் எவையும் காணப்படாமை அந் நூலகத்தின் குறைபாடாக எனக்குத் தோன்றியது. அங்கிருந்து புறப்பட்ட நாம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகா நாட்டு மண்டபத்தைப் பார்வையிட்ட பின் எமது விடுதிக்குச் சென்று எமது பொருட்களை எடுத்துக்கொண்டு சுற்றுலாப் பயணத்தை நிறைவு செய்வதற்காக கொழும்பில் இருந்து புறப்பட்டோம்.

ஆடல், பாடல்களுடன் எமது பயணம் இரவிரவாகத் தொடர்ந்தது. மறுநாள் 24.12.2011 அன்று காலை 7.30 மணியளவில் பேரூந்து வண்டி எமது பாடசாலையை அடைந்தது. பாடசாலை முன்றிலில் எமது பெற்றோர் எமக்காகக் காத்து நின்றனர். நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் எமது பெற்றோருடன் வீட்டுக்குச் சென்றோம்.

செல்வி.கோ.நர்மதா
தரம் - 10

சிந்தனைக்கு சில மணிகள்

******

- கண்டித்து படிக்க வைத்த ஆசிரியர் உன் உயர்வுக்கு வழிகாட்டியவர்.
- மன நிறைவு கொண்ட மனிதன் எக்காலத்திலும் ஏழையாக வாழ முடியாது.
- அருகில் இருக்கும் போது கோபுரங்கள் கூட உயரமாகத் தெரிவதில்லை. தூரத்தில் இருக்கும் போதே பிரமாண்டமாகத் தெரிகின்றன.
- தப்புக் கணக்குகளை அதிகம் போடாதே உன் வாழ்வே தப்பாகிப் போய் விடும்.
- பல தீபங்கள் உன்னால்தான் ஒளிருமாக இருந்தால் நீ தீக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.
- உண்ணாமல் நோன்பு இருப்பதை விட பசியுடன் இருக்கும் ஒருவனுக்கு விருந்தளிப்பது சிறப்பானது.
- நற்செயல்களை ஆற்றும்போது நாற்புறமும் இருந்து எதிர்ப்பு அலைகள் வரும்.
- யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக் கொள், பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.
- சத்தியமே வெற்றிதரும் சத்தியத்தை ஏணியாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள்.

செல்வி ப.பதுஷா
தரம் - 10

நனோ தொழில்நுட்பம்

******

இன்று பலராலும் பேசப்பட்டு வரும் நனோ தொழில்நுட்பமானது விஞ்ஞானம் கண்ட பரிணாம வளர்ச்சியின் புதிய திருப்புமுனையாகும். இலங்கையின் க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கான திருத்தியமைக்கப்பட்ட பாடத்தில் சேர்க்கப்பட்ட புதிய அலகுகளிலொன்று நனோ தொழில்நுட்பமாகும்.

நனோ மீற்றர் எனப்படுவது ஒரு மீற்றரின் பில்லியனில் ஒரு பகுதியாகும். ($1nm - 10^{-9}m$) நடைமுறை உதாரணம் மூலம் விளக்குவதாயின் நனோ மீற்றர் அளவுத்திட்டத்தல் உருப்பெருக்கிக் காட்டக்கூடிய வில்லையைப் பாவித்து ஒரு மனிதனின் தலைமயிரை 200C அகலமுடையதாகக் காட்ட முடியும். சடப் பொருளின் நுண்ணிய துணிக்கைகள் காட்டும் வியத்தகு இயல்புகளே நனோ தொழில்நுட்பம் பற்றிய கொள்கை உருவாக வழிவகுத்தன.

1959ஆம் ஆண்டில் நோபல் பரிசை வென்ற பௌதீகவியலாளரான றிச்சர்ட் ஃபெமன் (Richard peynman) என்பவரே நனோ தொழில்நுட்பத்துக்கான எண்ணக் கூற்றை விஞ்ஞான ரீதியாக முன்வைத்தவராவார். எனினும் புராதன கால உரோமர்களையே நனோ தொழில்நுட்பத்தின் முன்னோடிகளாகக் கருதலாம்.

தங்கத்தின் ஊசிமுனையளவிலான துணிக்கைகள் சிவப்பு நிறமாக ஒளிரும் தன்மையான இவ்வியல்பைப் பயன்படுத்தி உரோமர்கள் தங்கத்தை ஏறத்தாழ 10 நனோ மீற்றரளவிலான துணிக்கைகளாக மாற்றி சிவப்புக் கண்ணாடி தயாரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

தமது தலைமுடியின் நிறத்தைக் கருமையாக்க ஏறத்தாழ 5 நனோ மீற்றரளவிலான துணிக்கைகளையுடைய சாயத்தைப் பாவித்து வந்துள்ளனர். இன்றைய கால கட்டத்தில் எமது வாழ்வியலின் அடிப்படையை மாற்றி யமைக்கும் வகையில் மருத்துவம், இலத்திரனியல், விவசாயம், தொடர்பாடல், உற்பத்தி போன்ற பல துறைகளிலும் நனோ தொழில்நுட்பமானது தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது.

நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்கனவே சந்தைக்கு வந்துவிட்ட நிலையிலும் மக்கள் மத்தியில் அவை தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது.

நனோ எனும் பெயரைத் தமது வர்த்தகப் பெயராகக் கொண்டிருக்கும் பெரும்பாலான பொருட்களின் உற்பத்தியின் பின்னணியில் இருப்பது நனோ தொழில்நுட்பமே ஆகும். இன்று விளம்பரப்படுத்தப்படும் சில்வர் நனோ சலவை இயந்திரங்கள் நனோ தொழில்நுட்பத்தாலானவையே.

காபன் அணுவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் காபன் நனோ குழாய்கள், டென்னிஸ் மட்டைகள் போன்ற பல பொருட்கள் உற்பத்தி செய்ய வழிவகுக் கின்றன. இத்தகைய டெனிஸ் மட்டைகள் குறைந்த பாரமுடையவைகளாகவும் உறுதிமிக்கவையாவுள்ளதால் வர்த்தக ரீதியாகப் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

முன்னைய காலங்களில் சூரிய வெப்பத்திலிருந்து சருமத்தைப் பாதுகாப் பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கிறீம் வகைகள் பூசிய பின்னர் வெள்ளை நிறமாகத் தோற்றமளிப்பன. ஆனால் தற்போது நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப் படும் அத்தகைய கிறீம் வகைகள் மிகச் சிறிய துணிக்கைகளைக் கொண்டிருப் பதால் பூசிய பின்னரும் பூசியது போல் தோற்றமளிக்காத தன்மையையுடையன.

நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளின் நுண்ணிய இழைகள் காரணமாக அவற்றில் அழுக்குகள் தங்குவதில்லை. அதே சமயம் அவை கசங்கும் தன்மையற்றவை. இதனால் அத்துணி வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆடைகளை சலவை செய்யவோ அழுத்தவோ வேண்டியதில்லை.

நனோ தொழில்நுட்பத்தாலான குளிர்சாதனப் பெட்டிகளின் அறிமுகம் எந்த ஒரு உணவையும் மிக நீண்ட நாட்களுக்குப் பழுதடையாமல் பேண வழி வகுத்துள்ளது. இவைதவிர உறுதிமிக்க கட்டடப் பொருட்கள் மற்றும் டயர்களை உருவாக்கவும் நனோ தொழில்நுட்பம் பயன்படுகிறது.

நனோ மூவாயிகளின் அறிமுகமானது. மேசையில் வைத்துப் பாவிக்கப்படும் கணனிகளை சாதாரண மக்களும் உள்ளங்கையில் வைத்துப் பாவிக்கும் காலத்தை வெகுவிரைவில் உருவாக்குமென்பதில் எதுவித ஐயமுமில்லை. இம் மூவாயிகள் சிலிக்கன் குறை கடத்திக்கான உலக சந்தையை எதிர்காலத்தில் முற்றாக இல்லாதொழிக்கும் சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதுடன் சகல தொழில்நுட்ப சாதனங்களும் வினைத்திறன்மிக்க வகையில் உற்பத்தி செய்யப் படவும் வழிவகுக்கின்றன.

மருத்துவ ரீதியாக நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகமானது மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்துமென்பதில் எதுவித ஐயமுமில்லை. இந் நுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள், உட்கொண்ட மறுகணமே சம்பந்தப்பட்ட பகுதியில் தொழிற்படும் ஆற்றல்மிக்கன. இதனால் சாதாரண நோயாளி ஒருவர் தனது நோயைக் குணமாக்க நீண்ட நேரமோ அல்லது நீண்ட நாட்களோ காத்திருக்க வேண்டிய அவசியமற்றுப் போகிறது.

நனோ தொழில்நுட்பத்தால் உருவான நுண்ரோபோக்களை உடலினுள்ளே செலுத்தி தொற்று நோய்க்கிருமிகளையும் நோய்க்கலங்களையும் கண்டறிய வைக்கும் முயற்சிகள் ஆராய்ச்சி மட்டத்திலுள்ளன.

மருத்துவத்துறைக்கே மாபெரும் சவாலாக அமைந்துள்ள நோய்களி லொன்று புற்றுநோயாகும். புற்றுநோய்க்கலங்களை வேறுபடுத்தி அறிவது கடினம். அத்துடன் அவை வேகமாகப் பரவும் ஆற்றல் மிக்கன. புற்றுநோய்க்கான இன்றைய மருத்துவத் தீர்வுகள் யாவுமே விரைவாக வளர்ச்சி அடையும் அல்லது பரவும் கலங்களை அழிக்கும் செயற்பாட்டையே மேற்கொள்கின்றன.

இதன் காரணமாகப் புற்றுநோய்க் கலங்களுடன் சேர்ந்து அதே இயல்புடைய ஏனைய சில கலங்களும் அழிக்கப்படுகின்றன. இதுவே புற்றுநோய்க்கான மருத்துவப் பரிகாரத்தை மேற்கொள்பவர்களின் தலைமயிர்கள் வேகமாக உதிர்வதற்குக் காரணமாகின்றது.

ஆனால் இன்னும் ஆய்வு மட்டத்திலேயே உள்ள நனோ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படும் நனோ கோளங்கள் புற்றுநோய்க்கலங்களை மட்டும் தேடி அழிக்கக்கூடிய வல்லமை படைத்தவை. இவற்றின் அறிமுகம் புற்றுநோயைப் பரிகரிப்பதுடன் ஏற்படும் பக்கவிளைவுகளையும் கட்டுப்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கும்.

இன்று முழு உலகுமே எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை பூகோளம் வெப்ப மடைதலாகும். மனித செயற்பாடுகளால் அதிகளவில் வெளிவிடப்படும் காபனீரொட்சைட் மற்றும் பச்சை வீட்டு வாயுக்கள், பூகோளம் வெப்பமடைதலில் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் நனோ தொழில்நுட்ப ஆய்வுக்கென விஞ்ஞான பேராசிரியர்களின் வழிகாட்டலுடன் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான நனோ தொழில்நுட்ப ஆய்வு களுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் களமமைத்துக் கொடுப்பதுடன் மட்டுமன்றி மற்றைய நாடுகளுடன் பொருளாதார ரீதியாக இலங்கையும் போட்டியிடச் செய்வதற்கான ஒரு ஆரம்பகட்ட முயற்சியே இந் நிறுவனத்தின் தோற்றமாகும்.

நனோத் துணிக்கைகள் நச்சுத் தன்மையானவை என்பதால் இவற்றை மருத்துவ ரீதியாக உள்ளெடுக்கையில் அவை மூளை, தொண்டைக்குழி, நுரையீரல் போன்ற பாகங்களில் ஒன்று திரட்டப்பட்டு வேறு நோய்களோ அல்லது உயிராபத்தோ ஏற்படக் காரணமாகலாம். இந் நச்சுத் தன்மை நனோ தொழில்நுட்ப வியல் பிரயோகத்திலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு ஆபத்தாக அமையலாம். இவை நனோ தொழில்நுட்பத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் ஆகும்.

நனோ தொழில்நுட்பத்தின் அறிமுகம் பொருளாதார ரீதியாக பெருமளவில் முக்கியத்துவம் பெறுவதால் அதன் எதிர்காலத்தை உணர்ந்து பல முன்னணி நிறுவனங்கள் நனோ ஆய்வுகளில் பாரிய முதலீடுகளை மேற்கொள்கின்றன. இதனால் இவ்வாய்வுகள் துரிதகதியில் முன்னேற்றம் காணும் வாய்ப்புக்கள் உள்ளன.

திரு.க.ஆதவன்
(ஆசிரியர்) N.D.T.Maths

பைபிள் பொன் மொழிகள்

******

* தீச் செயல்களில் மகிழ்ச்சி காண்போர் கண்டனத்திற்கு உள்ளாவர்.

* அளவு மீறி உண்டு குடிப்பதில் களி கூராதே.

* பாவத்தினின்று மனந் திரும்புவோரைப் பழிக்காதே.

* பண்பான பேச்சு உன் மதிப்பை உயர்த்தும்.

* ஆய்ந்து நட்புக்கொள் நண்பரையும் விரைவில் நம்பிவிடாதே.

* பிடிவாதம் கொண்டோர் இறுதியில் தீமைக்கு உள்ளாவார்.

* உள்ளத்தில் உண்மையுள்ளவனாய் இரு.

* நம் வாழ்வு குறுகியது. துன்பம் நிறைந்தது.

* நீ மன்றாடும் போது மனம் சோர்ந்து போகாதே.
  தருமம் செய்பவரைப் புறக்கணியாதே.

* பொய் சொல்ல விரும்பாதே பொய் பேசும் பழக்கம் நன்மை தராது.

செல்வி தே.மெடோனா
தரம் - 10

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

******

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை தீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்றார் மகாகவி பாரதியார். மனித குலத்தின் மாண்புக்கு வெற்றிக்கு எழுச்சிக்கு உரிய மார்க்கம் ஒன்றுபடுதலே. ஒன்றுபட்ட உழைப்பின் மூலமே எச்செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். வெற்றியின் பின்னணியில் விடாமுயற்சியோடு ஒற்றுமையும் உள்ளடங்கியது. இந்த உண்மையை நாம் நன்குணர்த்தல் வேண்டும்.

இந்த உலகில் இன்றைய சூழ்நிலையில் யாரும் தனித்து வாழ முடியாது. சமூகத்தோடு ஒன்றுபட்டே வாழ முடியும். சமூகம் என்றால் கூட்டமைப்பு என்றே பொருட்படும். சமூக வாழ்வே மனிதனுக்கு உயர்ச்சி தரும். **"தனி மரம் தோப்பாகாது"** என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு கை தட்டி ஓசை எழாது. இரு கையும் சேர்ந்தாற்றான் ஓசை எழும். அதுபோல மனிதர்கள் இணைந்தாற்றான் செயல் சிறக்கும். குடும்ப வாழ்விலும் ஒற்றுமை அவசியம். **"யான் மட்டும் தனியாக வாழ்வேன்"** என்பது இயலாத காரியம். தனித்திருக்கும் போது வரும் தாக்குதல்கள் வாழ்வை தகர்த்துவிடும். **"அடம்பன் கொடியும் திறண்டால் மிடுக்கு"** என்பது பழமொழி. ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதனையும் சாகித்துக் கொள்ளலாம் என்பதை மனதிற் கொண்டு நாம் செயற்பட வேண்டும் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பர். சிற்றெறும்பு, பல ஒன்று சேர்ந்து தமது உணவுப் பொருட்களை நகர்த்திச் செல்வதைப் பார்த்திருக்கின்றோம். தேனீக்கள் பல சேர்ந்து தமக்கான கூட்டை அமைத்துக் கொள்கின்றன. சிறுகச் சிறுகத் தேனைச் சேர்க்கின்றன இவை எல்லாமாகக் கூடி வாழ்வதால் ஏற்படும் நன்மையினையே நமக்கு உணர்த்துகின்றன கூட்டுப்பண்ணை, கூட்டுத்தொழில், கூட்டுக் குடும்பம் என்பன எல்லாம் கூட்டுறவின் அவசியத்தையே நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. கூடித் தொழில் செய்யும்போது காலம் மிச்சமாகின்றது. காரியம் எளிதில் கைகூடு கின்றது. விரல்கள் இணையும் போதுதான் கை செயலாற்று கருவியாகிறது. அதுபோல மனிதர்கள் இணைந்தால் செயல் உருவாகின்றது.

நாடும் வீடும் சிறக்க ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையே வெற்றிக்கு வழி. நாம் கற்றறிய வேண்டிய முதல் மொழி அது சாதி, சமய பேதங்களைப் மறப்போம். சமயத்துவம் நிலைத்திட ஒன்றுபட்டு உழைப்போம். ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் உயர்வு காண்போம்.

செல்வி த.கீர்த்தனா
தரம் - 08

தொப்பிப் பாடல்

******

வெய்யிற் படாமலே வெள்ளைத் தொப்பி
வேறு வேறு நிறமான தொப்பி
நல்ல நல்ல வடிவான தொப்பி
நானும் மலிவாகத் தாறேன் தொப்பி
தம்பி தங்கச்சி வாருங்கோ
தலையைக் கொஞ்சம் காட்டுங்கோ
எங்க எங்க கொஞ்சம் பார்ப்பமோ
அடடா சோக்காப் போச்சுதே.

செல்வன் கோ.தனுசிகன்
தரம் - 04

ஞாபகத்தில் இருக்க வேண்டியது

******

நம்பக் கூடாதது	–	வதந்தி
ஆபத்தை விளைவிப்பது	–	அதிக பேச்சு
செய்யக் கூடாதது	–	நம்பிக்கைத் துரோகம்
செய்யக் கூடியது	–	உதவி
விலக்க வேண்டியது	–	சோம்பறித்தனம்
உயர்வுக்கு வழி	–	உழைப்பு
நழுவ விடக் கூடாது	–	வாய்ப்பு
பிரியக் கூடாதது	–	நட்பு
மறக்கக் கூடாதது	–	நன்றி

செல்வி க.டிலக்சிகா
தரம் - 03

நான் விரும்பும் ஆசிரியர்

******

நான் விரும்பும் ஆசிரியரின் பெயர் திருமதி.அ.றொக்ஷினி ஆசிரியர் ஆவர். எமக்கு நன்றாய் பாடம் சொல்லித் தருவார். நல்ல கதைகள் எல்லாம் எமக்குச் சொல்லித் தருவார். எம்முடன் அன்பாய் பேசுவார். அவர் மிகவும் அழகானவர். சின்ன சின்ன விளையாட்டுக்கள் எமக்கு செய்து காட்டுவார். எப்போதும் எம்மை அரவணைத்து எம்மை மகிழ வைப்பார். அவரைப்போல் ஒரு நல்ல ஆசிரியர் வேறு யாரும் இல்லை. அவரே நான் விரும்பும் ஆசிரியராவார்.

செல்வி. ச.ஜெனனி
தரம் - 03

விஞ்ஞானம் சார்ந்த உரையாடல்

******

கமல்	:	மாம்பழத்தினுள் வண்டு எப்படிச் செல்கின்றது?
மேரி	:	மாம்பழத்தினுள் வண்டு உட்புகுவது கிடையாது, மாம் பூவிலேயே வண்டின் முட்டை காணப்படும். மாம் பூ காயாகி கனியாக மாறும். அந்த பூவிலுள்ள முட்டை வாழ்க்கைச் சுழற்சியை முடித்துக்கொண்டு பழத்திற்குள்ளேயே சிறிய வண்டாக மாறும்.

தந்தை	:	ஐயோ, ஐயோ என் காரில் பிரேக், கிளச் ஸ்டியரிங், கோர்ன் எதையுமே காணவில்லையே! எல்லாம் திருட்டுப் போய் விட்டதே.
மகன்	:	கத்தாதேயுங்கோ அப்பா இருட்டிலே நீங்கள் ஏறி இருப்பதே பின் சீற்றில்.

செல்வன் பி.சௌரப்சர்மா
தரம் - 03

அன்புடைமை

******

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
இறைவா.... என்கிறார் பாரதியார்.
வகை வகையான இன்பங்கள்.....!
இவற்றில் எல்லாம் அன்பு செய்வதைப்
போல் இன்பம் வேறுண்டோ?
நாங்கள் மனிதர்கள், ஒருவரை ஒருவர்
நேசித்து அரவணைத்து, அதனால் இன்புற்று வாழும்
சிறப்பு எமக்கு மட்டுமே உரித்தான பண்பாடாகும்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்?"
என்றல்லவா வள்ளுவரும் வினவுகிறார்?
அன்பு கரையற்றது; ஆறாகப் பெருகும் தன்மையது;
அதைத் தாள் போட்டு அடைக்க முடியாது.

தாய் – பிள்ளை, ஆசிரியர் – மாணவர்
கணவன் – மனைவி, நண்பன் – தோழன்
என்று எத்தனை வகையான உறவுகள்.....?
இவை அன்பென்ற ஒன்றினால் இறுகப்பிணைந்துள்ளன.
மதத்தின் பெயரால் கலவரம்;
கணவன் மனைவியிடை களேபரம்;
மாணவர் போராட்டம் என்று இன்று
அன்பு வறுமையால் உலகமே அமர்க்களமாகி உள்ளது.

பூனைக்குட்டிக்கு நாய் பாலூட்டுகின்றது.
ஆனால் அண்டை மனிதனுடன் நாம்
அடிபட்டுக் கொண்டிருக்கின்றோம்.
அன்பான தோழர்களே, மனிதராய் பிறந்து இருக்கிறோம்
நம் ஆறாவது அறிவான பகுத்தறிவு எங்கே போய் விட்டது?
அனைவரிடமும் அன்பு செய்வோம்
ஆனந்தமாய் வாழ்வோம்....!
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது"

செல்வி உ.ஜகதா
தரம் – 05

The Proverbs and their meanings

******

Below is a list of well known sayings and Proverbs : Fixed phrases or sentence that give advice or say something that's generally true.

01. Absence makes the hert grow fouder - Used to say that when you are away from someone that you love, you love them even more.

02. There's no accounting for taste - Used to say how difficult it is to understand why some body likes something that you do not like at all.

03. It'll be all right on the night - Used to say that a performance, an event etc. will be successful even if the preparations for it, gave not gone well.

04. Beauty in the eye of the beholder - People all have different ideas about what's beautiful.

05. Beggars can't be choosers - People say beggars can't be choosers when there's no choice and some body must be satisfied with what's available.

06. Too many cooks spoil the both - if too many people are involved in doing something. it will not be done well.

07. Fools rush in where angels fear to tread - People with little experience try to do the difficult or dangerous things which more experienced people would not consider doing.

08. A friend in need is a friend in deed - A friend who gives you help when need it is a true friend.

09. The proof of the pudding (is in the eating) - You can only judge if something is good or bad when you have tried it.

10. A rolling stone gathers no moss - a person who moves from place to place, job to job etc. Doesn't have a lot of money. possession or friends but he's free from responsibilities.

11. No pain, no again - Used to say that you need to suffer if you want to achieve something.

12. There's many a slip "twixt cup and lip" nothing is completely certain until it really happens because things can easily go wrong at the last moment.

13. He who laugh's last laughs longest - Used to tell somebody not to be too proud of their present success; in the end another person may be successful.

14. Two wrongs don't make a right - Used to say that if somebody does something bad to you, the situation will not be improved by doing something bad to them.

15. Ignorance is bliss - If you do not know about something, you can wan't worry about it.

Mrs.Prageleyaa.Vinokanthan
Teacher (English)

எவ்வளவு பழம் பறித்திருப்பான்

******

உடல் நலம் இல்லாத தன் தாயை மருத்துவரிடம் காட்டினான் ஒருவன். அதற்கு அவர், "எப்படியேனும் ஒரு மாதுளம்பழத்தை உன் தாயாருக்கு உண்ணக் கொடுத்தால் அவர் உடல் நலம் தேறிவிடும்" என்றார். மாதுளம்பழங்கள் எங்கே கிடைக்கும் என்று சிந்தித்தான்.

அரசருக்கு உரிமையான தோட்டத்தில் மாதுளம்பழங்கள் உள்ளன. வேறு எங்கும் பழங்கள் கிடைக்காது என்பதை உணர்ந்தான் அவன். அரசரின் தோட்டத்திற்குச் சென்றான். தோட்டத்திற்குள் நுழைய ஆறு வாயில்களைக் கடக்க வேண்டும். ஒவ்வொரு வாயிலிலும் ஒரு வீரன் காவலுக்கு இருந்தான்.

காவலுக்கு இருந்த வீரனிடம் எனக்கு ஒரு மாதுளம்பழம் வேண்டும் என்னை உள்ளே அனுமதித்தால் நான் ஒரே ஒரு பழத்தை மட்டும் பறித்துக் கொண்டு வந்து விடுகிறேன். அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன் என்று கெஞ்சினான் அவன். அதற்கு ஒவ்வொரு வீரனும் "நீ கொண்டு வந்த பழங்களில் பாதியை எனக்குத் தர வேண்டும் அப்படியானால் உன்னை உள்ளே அனுமதிக்கிறேன்" என்றார்கள்.

அப்படியே செய்கின்றேன் என்று சொல்லித் தோட்டத்திற்குள் நுழைந்து பழங்களைப் பறித்தான் அவன். பிறகு ஒவ்வொரு வாயிலாகக் கடந்து வந்தான். ஒவ்வொரு வாயிற் காவலனிடமும் தன்னிடமும் இருந்த பழங்களில் பாதியைக் கொடுத்தான். வாயில்களை எல்லாம் கடந்து வெளியே வரும்போது அவனிடம் ஒரே ஒரு பழம் மட்டும் இருந்தது. அந்த வழியாக ஒரு முதியவர் வந்தார். அவர் அவனிடம் கேட்டார் எப்படி மாதுளம்பழத்தைக் கொண்டு வந்தாய் என்று அதற்கு அவன் கூறினான். கடைசி வாயிலைக் கடந்து வரும்போது என்னிடம் ஒரே ஒரு பழம் இருந்தது அப்படியானால் என் ஒப்பந்தப்படி அங்கு காவலிலிருந்த வீரனுக்கு ஒரு பழம் தத்திருக்க வேண்டும். ஆகவே என்னிடம் கடைசி வாயிலைக் கடப்பதற்கு முன் இரண்டு பழங்கள் இருந்தது. இதே முறைப்படி ஐந்தாவது வாயிலைக் கடப்பதற்கு முன் நான்கு பழங்கள் இருந்தன. நான்காவது வாயிலைக்

கடக்கும் முன் எட்டு பழங்களும், மூன்றாவது வாயிலைக் கடக்குமுன் பதினாறு பழங்களும் இரண்டாவது வாயிலைக்க கடக்க முன் முப்பத்திரண்டு பழங்களும் முதலாவது வாயிலைக் கடக்க முன் அறுபத்துநான்கு பழங்களும் இருக்க வேண்டும். ஆகவே நான் அறுபத்து நான்கு மாதுளம்பழங்களை அரசரின் தோட்டத்தில் பறித்திருக்க வேண்டி இருந்தது என்று கூறி மாதுளம்பழத்துடன் வீடு சென்றான்.

செல்வி ம.கஜித்தா
தரம் - 09

அம்மா

******

அம்மா என்பவள் அன்பிலும் மேலானவள்
உன் அன்பு வானத்தை விடப் பரந்தது
கடலை விட உன் தியாகம் எல்லையில்லாதது
உன் கர்ப்பத்தில் என்னை பத்து மாதம்
சுமந்த என் அன்புத் தாயே
உணவைப் பங்கிட்டு எமக்களித்து நாம்
உண்ட பின்பே தாமுண்ணும் தாய்
எமது கல்விக்காய் உழைத்த தாயே
நாளொரு தினமும் விதம் விதமாய்
உணவு சமைத்து நாருசித்து
நாமுண்ண எமை வளர்த்த தாயே
அம்மா உன் கருவறை உன் கோயிலில்
நான் குடியிருக்க வரம் வேண்டுகின்றேன்
தாயே உன்னை என் வாழ்வில் என்றுமே
மறக்க முடியாது!

செல்வி K.நர்மதா
தரம் - 10

உயிர் ஆசான்

******

அன்னைக்கும் தந்தைக்கும் அடுத்தவராய் சொன்னாலும்
அறிவைத் தருவதில் முதன் நிலை ஆசானையே சாரும்
அரும்பாடுபட்டு அளவில்லாத கல்வியை நமக்களித்து
அறிவுக்கண் திறந்து நல்வழி காட்டுவதும் ஆசானே.

இந்நாளில் பயில்வது எந்நாளும் உதவும்
இறுகிய கதவாய் இருக்கும் நம் அறிவை
இருள் நீக்கி ஒளியேற்றி இன்பமான
இவ்வுலகில் அறிமுகம் செய்பவரும் ஆசானே.

உறவுகள் கூட உதவாத சமயத்தில்
உதவிடும் கல்வியை உன்னதமாய் போற்றிடு
உன்னத கல்வியை உனக்களித்த ஆசானை
உலகம் போற்ற எந்நாளும் வாழ்த்திடு.

ஊக்கத்துடன் கற்பிக்கும் ஆசானை பெற்றிடு
உலகமே வியக்க கல்வியை கற்றிடு
ஊசலாடும் மனதினை கொன்றுவிடு
உலகம் வியக்க உயரத்தில் நின்றிடு.

செல்வன் ஜெ.நிரஞ்சன்
தரம் - 06

ஏழை கண்ட கனவு

******

சோமன் ஒரு ஏழை, தினந்தோறும் நகரில் உள்ள கடைகளில் பிச்சை எடுத்துச் சீவித்து வந்தான். இரவில் நகரில் உள்ள சிவன் கோவிலின் முன்பாக உள்ள மடத்தில் படுத்து உறங்குவான்.

அன்று வெள்ளிக்கிழமை கோயில் மடத்துக்குப் பக்கத்திலுள்ள சாப்பாட்டுக் கடைக்குச் சென்றான். கடை முதலாளி அவனுக்கு உணவு கொடுத்தார். நன்றாகச் சாப்பிட்டு விட்டு மடத்திற்கு வந்தான். நேற்று காலை அவன் வாங்கி வைத்திருந்த லொத்தர் சீட்டைப் பத்திரமாக மடித்து வேட்டித் தலைப்பில் முடிந்து கொண்டான். அதன் இலக்கங்களை பலமுறை மனப்பாடம் செய்து கொண்டான். சிறிது நேரம் படுத்து உறங்க எண்ணினான். மடத்தின் ஒரு மூலையில் படுத்துக் கொண்டான் சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தான்.

அவன் பக்கத்தில் ஒருவர் பத்திரிகையும் கையுமாக நிற்பது தெரிந்தது. அது அன்றைய **"வீரகேசரி"** பத்திரிகை. பத்திரிகையின் முதற் பக்கத்தில் லொத்தர் சீட்டு முடிவுகள் பிரசுரமாகியிருந்தன. அதனையே அவரும் உன்னிப்பாகப் படிப்பதைச் சோமன் கண்டான். பக்கத்திற் சென்று பத்திரிகையை எட்டிப் பார்த்தப்படி நின்றான். பத்திரிகையை வைத்திருந்தவர் இதனைப் பார்த்தார். அவருக்கு அவன் மீது அனுதாபம் பிறந்தது. என்ன பார்க்கப் போகிறீர்? என்று கேட்டார். அவர் கேட்டது சோமனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஐயா! இந்தப் பத்திரிகையில் லொத்தர் சீட்டு முடிவுகள் இருக்கின்றனவே அதைத்தான் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றான் சோமன்.

அந்தப் பெரியவரும் அவன் மீது மனமிரங்கி வீரகேசரியைக் கொடுத்தார். ஒவ்வொரு இலக்கத்தையும் சோமன் உன்னிப்பாகப் பார்த்தான். திரும்பத் திரும்பப் பார்த்தான். அவன் கண்களையே நம்ப முடியவில்லை. முதற் பரிசு பெற்ற இலக்கம் ஊ 1..., 2.... 0.... 7.... 0... 6.... 5 என்று அதில் இருந்தது. திரும்பத் திரும்ப வாசித்தான். தன்னிடமுள்ள லொத்தர் சீட்டின் இலக்கமும் அவைதான் என்று உணர்ந்தான். உடனே அவனுக்கு ஆனந்தம் எல்லை மீறியது.

"இதோ! நான் பரிசு வாங்கப் போகிறேன். இன்றைக்கே கொழும்பு செல்ல வேண்டும்" என்று கூறியபடி துள்ளி எழும்பினான். எனக்குத்தான் முதற் பரிசு என்று அவன் வாய் முனுமுனுத்தது. சுற்றும் வாகனங்கள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன கோயிலில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. அப்போது தான் அவன் தன் நிலையினை உணர்ந்தான் இதுவரை நேரமும் தான் கண்டது கனவு என்பதையும் உணர்ந்து கொண்டான். "**ஏழைக்கு ஏது இன்பம்**" என்று அவன் வாய் மீண்டும் முனுமுனுத்தது.

செல்வி த.கீர்த்திகா
தரம் - 10

எனது வீடு

******

எனது வீடு சரவணையில் உள்ளது
எனது வீடு அழகானது
எனது வீட்டில் அழகான தளபாடங்கள் உள்ளன.
எனது வீட்டின் முன்னால் அழகான பூச்செடிகள் உள்ளன
எனது வீட்டின் பின் பக்கத்தில் சிறிய தோட்டம் உள்ளது.
எனது வீட்டுத் தோட்டத்தில் பல காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன.
எனது வீட்டின் அயலில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது.
நான் எனது வீட்டை மிகவும் நேசிக்கின்றேன்.

செல்வி அ.தனுஜா
தரம் - 02

பாடு பாப்பா பாடு

******

பாடு பாப்பா பாடு பண்ணுடனே பாடு
வீடு தோறும் பாடு விரும்பிப் பாட்டுப் பாடு
நல்ல தமிழில் பாடு நலம் சிறக்கப் பாடு
அஞ்சிடாமல் பாடு ஆர்வத்தோடு பாடு
கொஞ்சிக் கொஞ்சிப் பாடு கும்மாளமே போடு
இனிமையாகப் பாடு இதயம் கனியப் பாடு

செல்வன் கோ.வஞ்சிமறவன்
தரம் - 01

விளையாட்டுக்கள்

******

கிரிக்கட்

விளையாடும் வீரர்கள் – 11 பேர்

ஹொக்கி

விளையாடும் வீரர்கள் – 11 பேர்

கரப்பந்து / கைப்பந்து

விளையாடும் வீரர்கள் – 06 பேர்

கூடைப் பந்தாட்டம்

விளையாடும் வீரர்கள் – 05 பேர்

வலைப்பந்தாட்டம்

விளையாடும் வீரர்கள் – 05 பேர்

எல்லே

விளையாடும் வீரர்கள் – 11 பேர்

செல்வன் ஜெ.ஜெனரங்கன்
தரம் - 04

உலகில் பயன்படுத்தும் நாணயங்கள்

******

01.	ரூபா	–	இலங்கை, இந்தியா, பாகிஸ்தான்
02.	டொலர்	–	அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, கனடா
03.	தினார்	–	அல்ஜிரியா, ஈராக், குவைத், லிபியா
04.	பவுண்ட்	–	எகிப்து, லெபனான், சூடான், சிரியா, இங்கிலாந்து
05.	ஜென்	–	ஜப்பான்
06.	பிராங்	–	பிரான்ஸ்

செல்வன் ப.சானுஜன்
தரம் - 03

பாடுவோம் பயில்வோம்

******

பாலர்களே வாருங்கள்
பாங்குடனே படியுங்கள்
பாடிப்பாடி பயிலுங்கள்
பண்பறிந்து வாழுங்கள்

பெண்கள் ஆண்கள் என்றுதான்
பேதமுண்டு உலகிலே
பெரியார் சிறியார் என்றொரு
பேதமில்லை கல்வியில்

ஆண்களோடு பெண்கள் சேர்ந்து
அறிவுலகம் செல்லுங்கள்
ஆண்டவனை எண்ணி வாழ்ந்து
அன்புலகை வெல்லுங்கள்.

செல்வி ந.நிலானி
தரம் - 01

எனது கணனி

******

- கணனி ஒரு மின்னணுச் சாதனம் ஆகும்.
- கணனியைக் கண்டு பிடித்தவர் சார்ள்ஸ்பபேஜ்
- கணனியைத் தெரியாத யாருமே இருக்க முடியாது
- கணனி எல்லா இடங்களிலும் காணப்படும்.
- அமெரிக்கக் கடற்படையே கணனியை முதன் முதலில் பயன்படுத்தியது.

செல்வி கு.துஷானி
தரம் -01

அன்னை தெரேசா

******

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் வடிவம், கர்த்தரின் அருட்கொடை என்றெல்லாம் போற்றப்படும் பெருமைமிக்கவர் அன்னை தெரேசா. ஐரோப்பாக் கண்டத்தில் அல்பேனியாவில் விவசாயக் குடும்பம் ஒன்றில் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் பிறந்தார். அன்னை தெரேசா அவ்வூர் அரசினர் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். குழந்தைகள், பெரியோர் கள், நோயாளிகள் போன்ற பலரோடும் இளமையிலேயே அன்பாகவும், மரியாதை யாகவும் பழகி வந்தார்.

கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த பற்றும் உறுதியும் கொண்டவர் தெரேசா. இயேசு பெருமானைப் போன்று மக்களுக்குத் தாமும் தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பினார். மக்கள் சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்தார்.

1925ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து அல்லல்படும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பினார். கிறிஸ்தவ மத பொதுநலச் சேவை என்னும் அமைப்பில் தன் இளமைப் பருவத்திலேயே அவர் சேர்ந்திருந்தார். இதனால் இந்தியா வந்து தொண்டாற்றுவதற்கு அனுமதி தருமாறு அங்குள்ள தலைமைப் பாதிரியாரைக் கேட்டுக் கொண்டார். ஆனால் இவரது இள வயதைக் காரணம் காட்டி அனுமதி வழங்கப் பாதிரியார் மறுத்து விட்டார்.

1928ஆம் ஆண்டில் இவர் லோரேட்டா கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பின்னர் இந்தியாவிற்கு வந்து டார்ஜிலிங்கில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சியின் பின் கல்கத்தாவிற்கு வந்து அங்குள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார்.

கல்கத்தா வீதிகளில் அம்மையார் கண்ட காட்சிகள் அவரது உள்ளத்தைப் பெரிதும் நெகிழச் செய்தன. பசிக் கொடுமையினாலும் நோயாலும் மக்கள் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தினார். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உணவு அளிப்பதோடு ஏழைக் குழந்தைகள் கல்வி பெற வழி செய்ய வேண்டுமென அவரது கருணையுள்ளம் விரும்பியது. ஆனால் கன்னிகா மடத்து விதிகள் அவற்றினை மேற்கொள்ள இடமளிக்கவில்லை. 1977ஆம் ஆண்டில் அன்னைக்கு நோபல் பரிசு கிடைத்தது. 1979ஆம் ஆண்டில் 3 இலட்சம் பெறுமதியான பாலசான் சர்வதேச விருது கிடைத்தது. 1997ஆம் ஆண்டு செப்ரம்பர் 5ந் திகதி காலமானார்.

வைத்தியர் பரிசோதனைக் குழாய்

******

வைத்தியர்களால் நோயாளிகளினுள் ஒவ்வொரு பகுதிகளில் ஏற்படக்கூடிய பல்வேறு சப்தங்களை இனங்கண்டு கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணம் வைத்தியரின் பரிசோதனைக் குழாய் அல்லது ஸ்டெதஸ்கோப் என்று அழைக்கப்படும். 1816இல் முதலாவது வைத்தியப் பரிசோதனைக்குழாய் பிரான்ஸ் நாட்டு வைத்தியரான ரொனிலினெக் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் தனது கண்டுபிடிப்பு பற்றிய தகவலை 1819ம் வருடம் வெளியிட்டார். இவர் காசரோகம் பற்றிய வைத்திய நிபுணராவார். எனினும் இறுதியில் அந்நோய் காரணமாக இறந்தார்.

இந்த உபகரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் நோயாளிகளின் சப்தங்களை இனங்கண்டு கொள்வதற்கு வைத்தியர்கள் செவியை உபயோகித்தனர். வைத்தியர்கள் தங்களுக்குத் தேவையான உடம்பின் பகுதிகள் மீது செவியை வைத்து இவ்வாறு சப்தங்களை இனங்கண்டு கொண்டனர். இந்த உபகரணத்தில் உடம்பின் மீது வைப்பதற்கென ஒரு பகுதியும், செவியில் வைப்பதற்கென ஒரு பகுதியும் இரு பகுதியும் உள்ளன. இதன்மூலம் பல்வேறு சப்தங்களை இனங்கண்டு கொள்ள முடிகிறது. முக்கியமாக இதயம், நுரையீரல், குடல், குருதி நாடிகள் போன்றவற்றின் சப்தங்கள் இனங்கண்டு கொள்ளப்படுகின்றன. இந்த உபகரணத்தின் மூலம் தேவையான சப்தங்கள் மாத்திரம் பெறப்பட்டு ஏனையவை அகற்றப்படுகின்றன.

கண்டுபிடிப்புக்கள்

******

01.	பரசூட்	–	A.J கனொரின்
02.	இன்சுலின் மருந்து	–	பிரெட்றிக்பக்ரிங்
03.	தீப்பெட்டி	–	J.E லுண்டீஸ்ரோப்
04.	எக்ஸ்ரே	–	ரோண்டீஜன்
05.	இயந்திரத்தறி	–	எட்மட்காட்ரைட்
06.	டோச்லைட்	–	தோமஸ்அல்வாஎடிசன்
07.	அணுகுண்டு	–	ஓட்டோஹான்
08.	மின் உயர்த்தி	–	E.G.ரெற்றிங்
09.	தையல் இயந்திரம்	–	I.M.சிங்கர்
10.	புகையிரதம்	–	ஜோர்ஜ் ஸ்ரீவன்சன்

செல்வி கி.கீர்த்தனா

தரம் - 09

எங்கள் வீட்டுப் பூனை

******

எங்கள் வீட்டுப் பூனை
இனிய நல்ல பூனை
வெள்ளை நிறப் பூனை
எவரும் விரும்பும் பூனை

பறனில் ஏறிப் படுக்கும்
பதுங்கி எலியைப் பிடிக்கும்
பாலை நக்கிக் குடிக்கும்
பாய்ந்து பாய்ந்து ஓடும்.

குட்டிக் கரணம் போடும்
குறும்புத் தனங்கள் செய்யும்
குதித்து விளையாடும்
கெட்டிக் காரப் பூனை.

செல்வன் ஸ்ரீ. ரிஷாந்

தரம் - 01

விலங்குகள் பற்றிய தகவல்கள் சில

******

01. உப்பு நீரை விரும்பிப் பருகுவது – ஒட்டகம்
02. வாழ்நாளில் தூங்காத உயிரினம் – எறும்பு
03. நாக்கிலாத உயிரினம் – முதலை
04. மூக்கில் பல் உள்ள விலங்கு – முதலை
05. புயல் வருவதை முன்கூட்டியே அறியும் பிராணி – யானை
06. தனது வாலில் உணவையும் நீரையும் சேமித்து வைக்கும் பிராணி – பல்லி
07. கல், ஆணி, கண்ணாடித்துண்டுகளை விழுங்கும் பறவை – தீக்கோழி
08. உடலை விடப் பெரிய தலையை உடைய உயிரினம் – எறும்பு
09. ஞாபகசக்தி அதிகமுள்ள விலங்கு – யானை
10. சூரியனை நேருக்கு நேர் பார்க்கும் சக்தியுடைய ஒரே பறவை – கழுகு

செல்வி.ந.நிஷாந்தினி
தரம் – 02

இலங்கை பற்றிய சில தகவல்கள்

******

01. இலங்கையின் தேசிய மரம் – நாகமரம்
02. இலங்கையின் தேசிய மலர் – நீலோற்பலம்
03. இலங்கையின் தேசிய பறவை – காட்டுக்கோழி
04. இலங்கைக்கு மிக அருகில் உள்ள நாடு – இந்தியா
05. இலங்கையின் மிக நீளமான நதி – மகாவலிகங்கை
06. இலங்கையின் உயரமான மலை – பேதுருதாலகாலமலை
07. இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி – பம்பரகந்த
08. இலங்கையின் நிர்வாகத் தலை நகரம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக்கோட்டை
09. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் – முத்தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி
10. தங்கத் தாத்தா என அழைக்கப்படுபவர் – நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

செல்வி.சி.சிந்துஜா
தரம் – 02

மாணவர் அடைவுமட்டங்கள்

தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

2008 - 2012

******

ஆண்டு	தோற்றியோர்	100 க்கு மேல் புள்ளி பெ.மா.எ	70க்கு மேல் புள்ளி பெ.மா.எ	சித்தி வீதம்
2008	09	01	02	22%
2009	10	03	07	70%
2010	06		01	17 %
2011	10	02	06	60%
2012	12	05	06	50%

க.பொ.த சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகள்

2007 - 2011

******

ஆண்டு	தோற்றியோர்	சித்தியடைந்தோர்	சித்தி வீதம்
2007	16	01	6.25%
2008	10	01	10%
2009	12	02	17%
2010	09	02	22%
2011	05	02	40%

சரவணை சேவா மன்றத்தினால் (கனடா)
எமது பாடசாலைக்கு நிலையான வைப்புச் செய்யப்பட்ட
ஞாபகார்த்த நிதியங்கள்

****

இலங்கை வங்கி - ஊர்காவற்றுறை

பெயர்	தொகை	வைப்பிலிடப்பட்ட திகதி
அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு	ரூ. 57000 . 00	18.01.2011
அமரர் இளையதம்பி சின்னத்துரை	ரூ. 57000 . 00	18.01.2011
அமரர் செல்லையா சிவஞானசுந்தரம்	ரூ. 114000 . 00	18.01.2011
செல்லம்மா கணபதிப்பிள்ளை	ரூ. 150000 . 00	16.07.2007
ஞானசக்தி பாலசுப்பிரமணியம்	ரூ. 100000 . 00	16.07.2007
செல்லம்மா தர்மலிங்கம்	ரூ. 50000 . 00	16.05.2008
மின்சாரத்திற்கான வைப்புநிதி	ரூ. 50 000 . 00	16.05.2008

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

விசேட செயற்றிட்ட நிதியம் வைப்புச் செய்தவர்கள்

01. பாலசுப்பிரமணியம் சிவகடாட்சம் குடும்பம்
02. சாம்பசிவம் அகிலேஸ்வரன் குடும்பம்
03. சுப்பிரமணியம் தியாகேஸ்வரன் குடும்பம்
04. திருமதி.ஜெயந்தி அகிலன் குடும்பம்

} ரூ. 200000.00 (31.07.2013)

அன்பளிப்புச் செய்தோர் விபரம்

******

01.	தெற்குப் பக்க மதில் 143 அடி	சரவணை சேவா மன்றம்
02.	மின்சார இணைப்பு	திரு.திருமதி.சோ.கந்தசாமி கலா குடும்பம் (பிரான்ஸ்)
03.	குடிநீர் விநியோகமைப்பு	சரவணை சேவா மன்றம்
04.	மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி	இரட்சணியசேனை அமைப்பு
05.	சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணம்	யுனிசெவ் நிறுவனம்
06.	பாடசாலை தண்ணீர்த் தாங்கி	யுனிசெவ் நிறுவனம்
07.	பாடசாலைக் கிணறுகளுக்கான மூடி	யுனிசெவ் நிறுவனம்
08.	சமையலறை	உலக உணவுத் திட்டம்
09.	கணினி அறையின் உள்பாதுகாப்பு	திரு.சோமசுந்தரம் கந்தசாமி (பிரான்ஸ்)
10.	பிளாஸ்ரிக் கதிரை	திருமதி.கருணா பாமா (கனடா)
11.	மின்விசிறிகள்	திரு.பி.ஆரூரன் (ஆசிரிய ஆலோசகர்)
12.	போட்டோ பிரதி இயந்திரம்	DCP நிதியம்
13.	ஒலிபெருக்கி	சரவணை சேவா மன்றம் (கனடா)
14.	மணிக்கூடு	திரு.கோபாலபிள்ளை திருக்குமார் (பிரான்ஸ்)
15.	நடுவம்	திரு.கு.பாலஷண்முகன் (ஆசிரியர்)
16.	பாடசாலை வழிகாட்டி	சரவணை நாகபூஷணி விளையாட்டுக் கழகம்
17.	தொலைபேசி	பொ.தர்மேஸ்வரன் (நயினாதீவு)

பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2013

******

தவணைப் புள்ளி அடிப்படையில் பரிசு பெறுவோர் விபரம்

ஆரம்பக்கல்வி

(அமரர் செல்லம்மா கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக)

தரம் - 1

1ஆம் இடம்	கு.துஷானி
2ஆம் இடம்	கோ.வஞ்சிமறவன்
3ஆம் இடம்	ந.நிலானி

தரம் - 2

1ஆம் இடம்	அ.தனுஜா
2ஆம்இடம்	கா.அருட்பிரகாஷ்
3ஆம் இடம்	கா.நிஷாந்தினி

தரம் - 3

1ஆம் இடம்	ச.ஜனனி
2ஆம் இடம்	பி.செளரப்சர்மா
3ஆம் இடம்	ம.மதுசன்

தரம் - 4

1ஆம் இடம்	பா.குகலயன்
2ஆம் இடம்	சி.டிசாந்தன்
3ஆம் இடம்	அ.அனோஜன்

தரம் - 5

1ஆம் இடம்	உ.ஜசுதா
2ஆம் இடம்	ப.மதுஷா
3ஆம் இடம்	பா.சாளினி

இடைநிலைப் பிரிவு

(அமரர் செல்லையா சிவஞானசுந்தரம்ஞாபகார்த்தமாக)

தரம் - 6

1ஆம் இடம்	த.பாவுஷா
2ஆம் இடம்	கெ.அபிதா
3ஆம் இடம்	கெ.நலிற்றனா

தரம் - 7

1ஆம் இடம்	அ.மைக்ரொனால்ட்
2ஆம் இடம்	பா.மைதிலி

தரம் – 8

1ஆம் இடம்	த.பிருந்தா
2ஆம் இடம்	த.கீர்த்தனா

தரம் – 9

1ஆம் இடம்	கி.கீர்த்தனா

தரம் – 10

1ஆம் இடம்	கோ.நர்மதா
2ஆம் இடம்	த.துளசிதா
3ஆம் இடம்	தே.மெடோனா

பாடசாலை மட்ட போட்டிகளுக்கான பரிசு பெறுவோர் விபரம்

ஆரம்பப் பிரிவு

(அமரர் கதிரவேலு திருநாவுக்கரசு ஞாபகார்த்தமாக)

01.	தரம் 02	மனனப் போட்டி	அ.நபிஷா
02.	தரம் 03	ஆக்கத்திறன் போட்டி	ப.சானுஜன்
03.	தரம் 04	ஆக்கத்திறன் போட்டி	கோ.தனுசியன்
04.	தரம் 05	சித்திரப் போட்டி	ச.விதுஷா

இடைநிலைப் பிரிவு

(அமரர் செல்லம்மா தர்மலிங்கம் ஞாபகார்த்தமாக)

தரம் – 6	இ.காந்தரூபன்
தரம் – 7	அ.அதீஸ்சன்
தரம் – 8	தே.டன்ஷன்
தரம் – 9	டே.மகிந்தன்
தரம் – 10	த.கீர்த்திகா

கோட்ட, வலய மட்டப் போட்டிகளுக்கான பரிசு பெறுவோர்

(அமரர் இளையதம்பி சின்னத்துரை ஞாபகார்த்தமாக)

கோட்டமட்டம்

01.	தரம் 3	சௌரப்சர்மா	Dictation	03ஆம்இடம்
02.	தரம் 4	சு.அனோஜன்	Poem	03ஆம் இடம்
03.	தரம் 6	த.பவுஜா	நீளம்பாய்தல்	03ஆம் இடம்
04.	தரம் 10	த.கீர்ததிகா	உயரம் பாய்தல்	02ஆம் இடம்
05.	தரம் 9	கி.கீர்த்தனா	அனர்த்த முகாமைத்துவம்	01ஆம் இடம்

வலய மட்டம்

01.	தரம் 9	கி.கீர்த்தனா	அனர்த்த முகாமைத்துவம்	4ஆம் இடம்

தரம் 5 (2012) புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றறு பரிசில் பெறுவோர்

(அமரர் ஞானசக்தி பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக)

01.	ஜெ.ஜெகதீபிகா	137 புள்ளிகள்
02.	கு.துஸ்யந்தினி	124 புள்ளிகள்
03.	ந.நிஷாந்தன்	114 புள்ளிகள்
04.	வி.சயந்தன்	101 புள்ளிகள்
05.	சி.தனுஜன்	100 புள்ளிகள்

தரம் 9 கணிதம், தமிழ்ப் பாடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமைக்கான பரிசில் பெறுவோர் விபரம்

(அமரர் தில்லையம்பலம் சிவசாமி ஞாபகார்த்தமாக)

01.	கி.கீர்த்தனா	கணிதம்
02.	க.ஸ்ரீபோஜன்	தமிழ்

சிவமயம்

யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்

வேலணை

சரவணை சேவா மன்ற அனுசரணையுடன் நடாத்தும்
பரிசுத் தினமும் 'நாகேசுவரி' மலர் வெளியீடும் – 2013

இடம் :–பாடசாலை பிரதான மண்டபம்

காலம் :–03.10.2013 வியாழக்கிழமை
காலை 9.30 மணி

தலைமை :–திரு. மு.சத்தியசீலன்
(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர் :–திரு. ச.அமிர்தலிங்கம்
(பீடாதிபதி, யாழ். கல்வியற் கல்லூரி, கோப்பாய்)

சிறப்பு விருந்தினர் :–திரு. தி.ஜோன் குயின்ரஸ்
(வலையக்கல்வி பணிப்பாளர், தீவகவலையம்)

கௌரவ விருந்தினர் :–திரு. கு.கணேசலிங்கம்
(முன்னாள் அதிபர்)
திரு. ச.பாலேந்திரன்
(முன்னாள் அதிபர்)
திரு. இ.மகேந்திரன்
(உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை நீதிமன்றம்)

நிகழ்ச்சி ஒழுங்கிணைப்பு:– திரு. க.ஆதவன்
(சிரேஷ்ட ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !

பாடசாலைச் சமூகம்,
யா/சரவணை நாகேஸ்வரி ம.வி.

சரவணை, வேலணை.

நாகேசுவரி மலர்

சிறப்புற உதவிய அன்புள்ளங்கள்

நாகேசுவரி மலர்க்கு மெருகூட்டிய

நல்லிதயங்கள்

நேயமிகு வாசகர்கள்

அனைவருக்கும்

நன்றிகள்

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

பாடசாலை தர உள்ளீட்டும் பொருட்கள் நியாயமான விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

ALL CEYLON DISTRIBUTERS

Importers of books, Magazines, Agriculture Equipments, all kinds of Stationery, All Kinds of Paper items, Chemicals, Sports Goods, Office Equipment etc...., and Government suppliers.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்



T.P : 021 222 5542, 021 5671527
E - Mail : acdil@ymail.com
Fax : 021 222 7983

No.212, K.K.S Road,
Jaffna.

With Best Compliments From

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

நாவியே மல்ரி ஹவுஸ்

போட்டோபிரதி. பக்ஸ். காலணி வகைகள்.
பான்சி பொருட்கள். Netcafe, கணனிகள்
உதிரிப்பாகங்கள். கணனி திருத்தங்கள்

தொ.பே.இல :
021 221 9160

186, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக
வெளிவர வாழ்த்துகின்றோம்.

அபிராமி சூ சென்ரர்

ABIRAMY SHOE CENTRE

155, 156, Modern Market
Power House Road,
Jaffna.

T.P : 021 222 3525

பவா பல்பொருள் வாணிபம்

எமது ஸ்தாபனத்தில்.....



பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும், தரமாகவும்
மலிவாகவும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

பவா பல்பொருள் வாணிபம்

சரவணை மேற்கு, வேலணை.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

சஞ்சிகா ரவல்ஸ்

யாழ்ப்பாணம் - மன்னார்

ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம்

& படகு சேவை

(ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகம்)

தொடர்பு : *077 4144097*
021 222 4311

37/9, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

ராஜலக்ஷ்மி

கட்டிடப் பொருள் விற்பனையகம்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



No.132,
K.K.S Road, Jaffna.
T.P : 021 222 4350

இல.132,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர்
சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

பி.என்.பி.மோட்டோர்ஸ்

P.N.P MOTORS

Dealers in Motor Cycle Spare Parts

T.P : 021 222 4442

113, Stanly Road, Jaffna.

இல.113, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

தர்சினி அமுதம்

எங்களிடம் சகலவிதமான அபிஷேகப் பொருட்கள், அபரக் கிரியைக்கான பொருட்கள், வெற்றிலை, (முழு) பாக்கு, பாக்குச் சீவல், புகையிலை, சுருட்டு முதலியன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்.

தொ.பே : 021 222 5733
077 5020333

இல : 89,90 மேற்கு மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் பரிசுத்தினம் சிறப்புறவும் நாகேசுவரி மலர் சிறப்புற வெளிவரவும் எங்கள் நல்வாழ்த்துக்கள்

சரவணை நாகபூஷணி விளையாட்டுக் கழகம், சரவணை.

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக
வெளிவர வாழ்த்துகின்றோம்.

Narmatha GOLD CENTRE

(Private Limited)

நர்மதா கோல்ட் சென்டர்

(GENUINE 916 GOLD)

நகைகள் பரிசோதனை செய்யப்பட்டு தர சான்றிதழ்
வழங்கும் சேவையும் நடைபெறுகிறது.

169, Power House Road,
Jaffna.

169, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

151, SEA STREET,
COLOMBO - 11,

151, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

T.P : 011 - 2389282, 0112332948

Fax : 011 - 2399541

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர்
சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

கலைவாணி கல்வி நிலையம்
KALAIVANI INSTITUTE

தரம் 01 முதல் O/L வரையான வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.
வயது வேறுபாடின்றி அனைவருக்குமான
Spoken, Singala வகுப்புக்களும்
Spoken English வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தரம் 4, 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
வகுப்புக்கள் யாழ் பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு : சி.அசோக்குமார் (B.A)
(இயக்குனர்)
T.P : 077 4454745

யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய நாகேசுவரி மலர் சிறப்பாக
வெளிவர வாழ்த்துகின்றோம்.

ANNAI BOOK DIPOT

No, 07, New Market, Jaffna.

Prop : S.Vijitharan



எங்களிடம் சகலவிதமான புத்தகங்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

office :
Tel : 021 222 9881
Fax : 021 222 0865
Mobile : 077 2487662

Home : 021 222 7997

சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982